ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில்

கும்பாபிஷேகம்

சிறப்பு மலர் 1978 வசகப்பனேரி

வசகப்பனேரி

ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில்

கும்பாபிஷேகம்

சிறப்பு மலர்

1978

92:38.44133
L8

We have made 'SAVING' a fine art. We have discovered the easy and regular ways of saving to suit your needs.

DAILY DEPOSIT SCHEME

Little drops of water make a mighty Ocean. Pay 50 paise daily and get back Rs. 803/- after four years. You can deposit even without coming to our door.

VALARNIDHI SCHEME

The interest we pay will help you a long way in making your Children's rosy future. Invest Rs. 1,000/- (and multiples of Rs. 100 thereof) and enjoy a maximum interest of 44·48%,

LOHT SCHEME

Save today for care free tomorrow. Invest monthly Rs. 10/- for 11 years. Get your amount trebled for next 11 years.

CASH CERTIFICATES

To add to the festive mood of your friends and favourites give them the pleasure of receiving our cash certificate. Available in face value of Rs. 50/-.

PLATINUM JUBILEE CERTIFICATES

Give your savings a lucky break. Invest Rs. 50/- in our Platinum Jubilee Certificates for 10 years.

Buy a chance of winning Rs. 1,00,000/- or other 3610 prizes while your original investment gets doubled.

We pay more interest for your Savings Bank accounts.

and Chit Groups from Rs. 1,000/- to Rs. 1 Lakh.

THE SOUTH INDIA BANK LTD (TINNEVELLY)

62, EAST CAR STREET, TIRUNELVELI-6

COME - LET US GROW TOGETHER

திருப்பணிக் குழு

ஸ்ரீ V. S. மணி ஐயர், B.A., B.L. மிட்டாதார், கிருஷ்ணபுரம்—தலைவர்.

,, S. சந்திரமௌளீஸ்வரய்யர், கொச்சி —உபதலைவர்

,, A. சிதம்பரகிருஷ்ணய்யர், திருவனந்தபுரம் —செயலாளர்

,, V. S. வேம்பன், கிருஷ்ணபுரம் —பொக்கிஷதார்

ஸ்ரீ S. N. லெக்ஷ்மணய்யர், கொச்சி

,, L. C. கிருஷ்ணய்யர், கிருஷ்ணன்கோயில்

,, A. லெக்ஷ்மணய்யர், எர்ணுகுளம்

,, A. ராமசுவாமி அய்யர், நாகர்கோயில்

,, S. நாராயணய்யர், திருவனந்தபுரம்

,, S. சுந்தர ராமசாமி, நாகர்கோயில்

,, K. துரைசாமி, கொல்லம்

,, V. சிதம்பரகிருஷ்ணய்யர், ஸ்ரீவைகுண்டம்

,, K. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், தேர்க்கன்குளம்

,, S முத்துசுவாமி ரெட்டியார் ,,

,, N. V. ஆண்டி ரெட்டியார் ,,

,, P. சங்கரநாராயண ரெட்டியார் ,,

,, P. பெரும்படையாக் கோனர் ,,

,, S. முத்துசுவாமிக் கோனர் ,,

,, S. லெக்ஷ்மணதாஸ் ,,

,, V. லெக்ஷ்மணன் ஆசாரி ,,

,, S. தாண்டவமுர்த்தி தேவர் ,,

மலரின் உள்ளே...

1.	வண்ண மலர்கள்.	...	திரு V. S. வேம்பன்
2.	வாழ்த்துச் செய்திகள்.	...	
3.	The Car goes Far	...	
4.	வரவேற்பு இதழ்	...	திரு V. S. மணி அய்யர்
5.	கண்டதும்..கேட்டதும் செய்ததும்	...	திரு V. S. மணி அய்யர் கிருஷ்ணபுரம்.
6.	கோவில் திருப்பணி	...	வித்வான் ல. சண்முகசுந்தரம், தென்காசி.
7.	மூர்த்தி பூஜை	...	திரு K. S. வெங்கடராம சாஸ்திரி ஸ்ரீரங்கம்.
8.	ஆலயமும் இறைவனின் உருவ வழிபாடும்	...	S. ஹரிஹரன், கடையநல்லூர்.
9.	வரம் தரும் பெருமாள்	...	புலவர் முத்துராமன்
10.	ஸ்ரீ பாஞ்சராத்ர மகிமை	...	வித்வான். A. V. பெரியதிருவடிபட்டாச்சார் ஸ்ரீவைகுண்டம்.
11.	நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ அருளும் அருளுரை	...	மதுரை ஆதீன கர்த்தர் அவர்கள்.
12.	பூமாரி பொழிந்தனர்	...	கௌஸ்துபமணி
13.	மணிக்குலம் அணிபெறக் கனிவுடன் காக்கவே!	...	திரு வி. ஜி. சீனிவாசன், மதுரை.
14.	லக்ஷ்மிநாராயணன்பாதம் பணிவோம்	...	திருமதி ஜானகி இராமகிருஷ்ணன் இலஞ்சி.
15.	விசிஷ்டாத்வைதம்	...	திரு R. தேவராஜன் பம்பாய்.
16.	ஸ்ரீராம நாம ரஸாயனம்	...	திரு A. K. வெங்கடநாராயண அய்யர். சேலம்.
17.	விளம்பரங்கள்	...	

வண்ண மலர்கள்

நினைக்கிறேன், இனிக்கிறது, நெஞ்சமெல்லாம் மணக்கிறது...

தென் பொருநை பெருக்கெடுத்து துள்ளியோடும் ஸ்ரீவைகுண்டத்திற்குத் தெற்கே சுமார் ஏழு கல் தொலேவில் வசகப்பனேரி என்னும் குக்கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல எம்பெருமாளுக்கும் பரிவார தேவதைகளுக்கும் குடமுழுக்குப் பெருவிழா நடாத்தல் வேண்டும் என்று திட்டமிட்ட நாட்களேயும் நிகழ்ச்சிகளேயும் ஒவ்வொன்ருக நினைக்கிறேன், இனிக்கிறது, நெஞ்சமெல்லாம் மணக்கிறது...

இளந் தென்றலின் குளிர்மை, பச்சைக் கம்பளமோ எனக் காண்பவர் மயங்கும் நெற்பயிரின் செறிவு, கரை தழுவும் அலேகளின் ஏற்ற இறக்கம், பல வண்ணப் பறவைகளின் 'க்ரீச்' என்னும் மெல்லிய ஒலி, பனே ஓலேகள் காற்றினுல் ஏற்படுத்தும் ஓயாத கீதம்—

திருப்பணிகளே நிறைவேற்றச் செங்கல், மணல், சிமிண்ட், மரச் சாதனங்கள் ஆகியவற்றை வெவ்வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்து கொடுக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள், தடங்கல்கள்—

பெருங்குளம் வடக்குக் கரையில் ஸ்ரீதர்ம சாஸ்தா ஆலயத்தை நிர்மாணித்த நினேவு அலேகள்—

ஸ்ரீ முத்தாரம்மன் கோயிலேத் திடீரென்று புதுப்பித்த அவசர காலப் பணிகள்—

நண்பர்களேயும் சுற்றத்தாரையும் பணி முடித்த தொழிலாளர் தோழர்களேயும்—

தக்க சமயத்தில் தக்கவாறு கைகொடுத்த பெருமக்களின் பரந்த மனப்பான்மையையும் திருப்பணிக் குழுவினரின் ஒருமித்த ஒத்துழைப்பையும்—

குடமுழுக்குப் பெருவிழாவில் கலந்துகொண்ட விற்பன்னர்களின் வேத முழக்கங்கள், மங்கையரின் மங்கலப் பாடல்கள், தோரணங்கள், வான வேடிக்கைகள், அலை மோதிய பக்தர் கூட்டம்—

எல்லாமே இப்பொழுதும் நடைபெறுவது போல் ஒரு பிரமை; கற்பனை; உள் மனத்தின் பிரதிபலிப்பு—

இவற்றை யெல்லாம் கட்டுக் கோப்பாக மலராகத் தொடுத்து அழகுசெய்து இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டுமென்று நினைக்கிறேன், இனிக்கிறது, நெஞ்சமெல்லாம் மணக்கிறது...

நெஞ்சத்து நினைவலைகளை நனவாக்கிய எழுத்துக் கலைஞர்கள், விளம்பரம் நல்கிய பண்பாளர்கள், அச்சக உரிமையாளர் அனைவருக்கும் நன்றி!

எல்லாவற்றிற்கும் மேலாக நம்மால் வர்ணிக்க இயலாத எம்பெருமானின் திருவருள்—

எப்பொழுது அது நம்மைச் சார்கிறதோ, அப்பொழுது தானே நாம் வாழ்வில் மேன்மை அடைகிறோம்! பிறவிப் பெரும்பயனும் பூர்த்தி அடைகிறது!

V. S. வேம்பன்
மலர்க் குழு சார்பாக



ஸ்ரீ பூ ஸமேத ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள்
வசகப்பனேரி

Private Secretary
To His Holiness Sri Jagadguru
Shankaracharya, Dakshinamnaya
SRI SARDA PEETHAM
Sringeri-577 139 Karnataka

Date: 6—5—78

Sri V. S. MONEY, B.A., B.L.
MITTA MANSION
KRISHNAPURAM-627 759
Kadayanallur.

Dear Sir,

Your invitation for the Kumbhabhishekam of your family deity Sri Lakshminarayanaswamy Perumal Temple at Vasagappaneri in Srivaikuntam Tk was submitted to His Holiness with your Pranams.

His Holiness blesses for success of the Kumbhabhishekam and that your family deity may be pleased to shower its grace on you all.

Asir Mantrakshathas with Sri Sarada Sri Chandramouleswara Prasadas are enclosed.

Yours sincerely

Giridhara Sastri

Private Secretary

HIS HOLINESS
SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI

JAGADGURU
SRI SANKARACHARYA SWAMI MUTT

KANCHEEPURAM

Camp: திருவனந்தபுரம்-23 Date: 5—4—1978

ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் சிவன் கோவிலும் பெருமாள் கோவிலும் உண்டு. தெருக்கோடியில் ஒரு பக்கத்தில் சிவபெருமானும் மற்றொரு கோடியில் பெருமாளும் இருந்தால், அதை அக்ரஹாரம் என்பார்கள்.

"அக்ரோ+ஹரிச்ச+ஹரோவ்ச்ச+அக்ரஹார:" என்பது வட மொழிச்சொல்.

நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுக்காவிலுள்ள வசகப்பனேரி எனும் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப்பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரணம் செய்ய முன்வந்திருப் பதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

இதற்கென ஸ்ரீமடத்திலிருந்து ரூ. 101/- அளிக்கப்படுகிறது. எல்லா ஆஸ்திக அன்பர்களும் இது போன்ற நல்ல பணிகளுக்கு உதவி செய்து பகவானுடைய அருளுக்கு பாத்திரராகும்படி ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்மிருதி

ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்
நான்குநேரி ஸ்ரீமடம்
நான்குனேரி
20—5—1978

பிரஹ்மஸ்ரீ வி. எஸ். மணி ஐயர் அவர்களுக்கு

இப்பவும் தாங்கள் அனுப்பிவித்த ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப்பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேக பத்திரிகை கிடைத்தது.

ஷை கும்பாபிஷேகம் நிர்விக்னமாகவும், மிகச்சிறப்பாகவும் நடைபெற எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம். ஷை லக்ஷ்மீ நாராயணப் பெருமாள் கும்பாபிஷேக மஹோத்ஸவம்கண்டருளி, மேலும் நித்ய, மாஸ, பக்ஷ. ஸம்வத்ஸராதி விசேஷ உத்ஸவங்களையும் கண்டருள வேணுமென்று அவரையே ப்ரார்த்திக்கிறோம்.

ஷை லக்ஷ்மீ நாராயணப்பெருமாளுடைய பரம கிருபையால் உங்களைப் போன்ற நிர்வாஹர்களுக்கும் மற்றும் அனைத்து ஆஸ்ரிதர்களுக்கும் ஸகலவிதமாயுள்ள ஸ்ரேயஸ்ஸுக்களும் ஏற்பட்டு ஜகத்து சுபிக்ஷமாகவும் மங்களகரமாகவும் அபிவிருத்தியடைந்து ஆனந்திக்க லக்ஷ்மீ நாராயணப்பெருமாளை அடிபணிந்து மங்களாசாசநம் பண்ணுகிறோம்.

ஸ்ரீராமானுஜன்

ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம், சேலம்-14.

FOUNDER-PRESIDENT
H. H. SRIMATH SATHGURU
SWAMI SANTHANANDA

10—1—1978

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரகித்தருளிய அருளாசிச் செய்தி

பிராசீன, புராதன ஆலய ஜீர்ணோத்தாரண திருப்பணி நூதன ஆலயத்தை எழுப்புவதை விட மிக்க சிரேஷ்டமானது.

தர்மார்த்த கைங்கர்யங்களிலேயே சதா நாட்டம் கொண்டு தான் நினைத்ததை செயல் படுத்தும் நல்லறிவும், நல்லொழுக்கமும், நல்மனமும் நிரம்பப் பெற்றுள்ள ஆஸ்திகோத்தம ஸ்ரீமான் V. S. மணி அய்யர் அவர்கள் முன்னின்று நடத்தும் வசகப்பனேரி ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப்பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரணப் பணியை அறிந்து ஸ்ரீமத் சத்குரு ஸ்வாமிகளவர்கள் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார்கள்.

உலகையே தன்வசப்படுத்தும் வசகப்பனேரி பெருமாள் கடாக்ஷத்தால் ஜீர்ணோத்தாரண திருப்பணிகள் செவ்வனே முடிந்து மஹாகும்பாபிஷேகம் சிறப்பாகவும், சீராகவும் நடைபெற வேண்டுமாக விசேஷ ஆசிகளுடன் ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள், ஜகஜ்ஜனனியான ஸ்ரீபுவனேஸ்வரி தேவி ஸ்மரண பூர்வகம் அனுக்ரகித்தருளிய பிரசாதங்கள் இத்துடன் அனுப்பியிருக்கின்றன.

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த
ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞைப்படி

அ. வே. தேவராஜசர்மா

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA

Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika Paramachariya Swamigal.

MADURAI AADHEENAM

70, South Avani Moola Street, MADURAI-625001

திரு. வி எஸ். மணி ஐயர்,
கிருஷ்ணபுரம்,
கடையநல்லூர்.

Date. 27—4—'78

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

26 தேதி எழுதிய கடிதமும், வசகப்பநேரி ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேக கைங்கர்யப் பத்திரிகையும் கிடைத்து மகிழ்ந்தோம்.

யார் யாருக்கு எந்த எந்த அளவில், அப்புண்ணிய கருமத்தில், ஈடுபட வேண்டும் என்ற திருவருள் திட்டம் இருக்கிறதோ அதன்படியே, இவ்வுலகில் உள்ள திருப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ லட்சுமி நாராயணப்பெருமாள் அவருக்கு வேண்டிய காரியத்தை அவரே முன்னின்று சிறப்பாக முடித்துக் கொள்வார். குடமுழுக்கு விழா யாதொரு விக்கினமும் இன்றிச் சிறப்பாக நடந்தேறவும் அதில் பங்குகொள்கின்ற யாவரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

ஸ்ரீஞானசம்பந்த தேசிகர்

Raj Bhavan
Madras-600 022

29—4—1978

MESSAGE

I am glad to know that the Vasagappaneri Swamy Sri Lakshminarayana Perumal Temple is being renovated and that its Kumbabishekam will soon be celebrated. I offer my best wishes for the success of the work undertaken and the celebration.

Prabhudas B. Patwari

(Governor of Tamil Nadu)

GOVERNOR OF KERALA

RAJBHAVAN
TRIVANDRUM
May 9, 1978.

I am glad to learn that the 'Kumbhabishekam' of the Renovation of the Temple of Lord Lekshmi Narayana Perumal of Vasakappaneri will be celebrated on the 9th June, 1978 and that a Souvenir will be issued on that occasion. May the blessings of Lord Lekshmi Narayana Perumal abide with the peoples of Vasakappaneri, of India and the Universe.

Jothi Vencatachellum

P. R. RAMASUBRAHMANEYA RAJAH RAJAPALAIYAM

'Ramamandiram' 25—6—1978



I am extremely happy to know that a souvenir is being published to mark the auspicious occasion of the Kumbabishekam of Swami Sri Lakshminarayana Perumal at Vasagappaneri near Srivaikuntam. I heartily congratulate my friend Sri V. S. Money Iyer and the Committee on this laudable work.

I pray the Almighty to shower His choicest blessings on all.

P. R. Ramasubrahmaneya Rajah

நா. மகாலிங்கம், பி. எஸ்ஸி., எப். ஐ. இ.

6, போயசு தோட்டம்
சென்னை 600 086
தொலைபேசி: 71164
30—5—78

அன்புடையீர்,

வணக்கம்.

தாங்கள் அனுப்பி வைத்த 'ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலய விமான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பத்திரிகை வரப்பெற்றேன்.

மிக்க மகிழ்ச்சி.

ஆழ்வார்களின் அருளிச்செயல் பெற்ற திருவைகுண்டத்திற்கு அருகில் திகழும் 'வசகப்பனேரி' என்னும் சிற்றூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பூ சமேத ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயத் திருப்பணிகள் பூர்த்தியாகி மஹா கும்பாபிஷேகம் நிகழ இருப்பது போற்றத்தக்க தெய்விகப் பணியாகும்.

ஜுன் 5-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை ஆறு நாட்களும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் சிறப்புற அமைந்திருக்கின்றன.

பக்திப் பயிர் செழித்து வளர இந்த நிகழ்ச்சிகள் துணைசெய்கின்றன. தங்களுக்கு என் பாராட்டுக்கள்.

வசகப்பனேரி ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நியமங்களுடன் இனிது நிறைவுற எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள,

நா. மகாலிங்கம்

THE CAR GOES FAR

V. S. MANI IYER, Land - Lord, Krishnapuram recalls the following episode. My father was very anxious that we should invite HH to our village and honour him. But he died before his wish could be fulfilled. When HH was camping at Tirunelveli I met him and mentioned my desire that he should visit our village. But there is no motorable road and the local people dissuaded HH from accepting my invitation. But HH was adamant and said that since he had made his promise, he should not break it and added " Let the car go as far as possible. Thereafter, if necessary, I shall walk". Fortunately, the car came right upto the village. Addressing the local people in the temple of Sri Lakshminarayana, HH said, humourously, "This place is an example of Advaita. It contains only one temple. It has only one house and it is inhabited by only one person".

(Extract from SHASTIABDAPURTHY SOUVENIR of Sri Sri Abhinava Vidyatheertha Mahaswamigal Jagadguru Sankaracharya of Sri Sarada Peetam, Sringeri.)



சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த
மஹா ஸந்நிதானம் அவர்கள்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீசாரதாபீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாசந்நிதானம் அவர்கள்

பாத பத்மங்களில்

15—1—65 குரோதி ஆண்டு தை மீ 2ஆம் உ வசகப்பனேரி விஜயத்தில்

கிருஷ்ணபுரம் மிட்டாதார்

V. S. மணி அய்யர் B. A. B. L.

பணிவுடன் சமர்ப்பித்த

வரவேற்பு இதழ்

குருர்பிரம்ஹா குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வர:
குரு ஸாக்ஷாத் பரம்பிரம்ஹ தஸ்மை ஸ்ரீ குரவே நம:

சச்சிதானந்த குருவே!

பகவத் பாதாள் பரம்பரையில் வாழையடி வாழையென வந்தருளிய வள்ளலே, சந்நிதான வரவு நல்வரவாகுக! கு = இருள், ரு = நீக்குகிற வன் என்ற வாக்கியப்படி எங்கள் மன இருளகற்றி ஞானத்தைப் புகட்டும் சந்நிதான பாதஸ்பரிசத்தால் இவ்வூர் கிருதக்ஞதை அடைந்தது.

அவ்யாஜ கருணாமூர்த்தியே!

நவகிருச்சிரபலன் என்று பெரியோர்களால் சொல்லப்பட்ட தாம்பிரபரணி என்னும் ஜீவநதியின் காத தூரத்துக்குட்பட்டதும் நவ திருப்பதிகளில் ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி ஆகியவற்றிற்கு அடுத்தும் ஸ்ரீகைலாசபதி, ஸ்ரீஏகாந்தலிங்கம் ஆகிய சிவக்ஷேத்திரங்களை அடுத்தும் திருப்பதிக்கு சமமான கருங்குளம் ஸ்ரீ வேங்கடாசலபதி சந்நிதியை அடுத்தும் இருக்கும் இவ்வூரை எங்கள் குலதனமான ஸ்ரீலக்ஷ்மிநாராயணப்பெருமாள் ஆலயமும் துர்க்காலயமும் ஹரிஹர புத்ராலயமும் சிறப்பிக்கின்றன. இந்த ஊர் எங்கள் மூதாதையர்கள் வாழ்ந்தவூர்; ஸ்வர்க்கவாசியான என் பிதா ஸ்ரீ. சி. வேம்பய்யர் அவர்கள் ஜனனபூமி.

அருள்வடிவு எடுத்துவந்த அற்புதமூர்த்தியே !

ஷி லக்ஷிமிநாராயணப்பெருமாள் ஆலயம் ஜீர்ண ஸ்திதியிலிருந்ததை மதிப்பிற்குரிய என் தந்தையார் புனருத்தாரணம் செய்து முன் மணிமண்டபம், விநாயகர் ஆலயம், திருமதில் ஆகியவை எடுப்பித்ததோடு துர்க்கா கோயிலையும் புனருத்தாரணம் செய்து திருமதில் எடுப்பித்தார்கள். நூதனகிரஹம் அமைத்தார்கள். ஸ்ரீபெருமாளுக்கு 1941ஆம்ஸ்ரீ விஷுஸ்ரீ வைகாசிமீ 31உ வியாழக்கிழமை உத்திராட நக்ஷத்திரம் விருஷபலக்னத்தில் ஜீரணோத்தாரண மஹாசம்புரோக்ஷண கும்பாபிஷேகம் அதிவிமரிசையாக பகவத்கிருபையால் நடத்தினர்கள். மஹாசந்நிதானம் அவர்கள் இந்த ஆலயத்தை மங்களாசாஸனம் செய்ய வேண்டுமென்று அளவில்லாத ஆசையுடன் இருந்தார்கள். அவர்கள் கனவை இன்று நனவாக்கித் தந்த மஹாசந்நிதானத்துக்கு மிக்க நன்றியுடையவனுக இருக்கிறேன்.

அருட்பெரும் ஜோதியே !

சமுகம் விஜய யாத்திரையில் சிஷ்யர்களின் நலன் ஒன்றைமட்டுமே கருதி தவத்தையும் சரீர சிரமத்தையும் பாராமல் கருமமே கண்ணுயினர். மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார் முதலாய வாக்கியங்களுக்கு லட்சியமாய் வாழ்ந்துவரும் சமுகம் இங்கு வாழ்ந்து வருபவர்களுக்கும் தரிசனம் தரவந்த பெருமையை எங்ஙனம் எடுத்துச் சொல்வேன்! செயல்மறந்து வாழ்த்தி சமுகம் பொன்னுன திருவடிகளில் வணங்குகின்றேன். மஹாசந்நிதானம் விஜயத்தால் இந்த ஊர் ஜனங்கள் எல்லாரும் அபிவிருத்தியடைய ஒற்றுமையுடன் அருள்புரிந்து ஆசி கூறும்படி தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

வசகப்பனேரி
15—1—65

ஆச்சார்ய தேவோபவ அத்யந்த பிரியசிஷ்யன்,

V. S. மணி அய்யர்.

ஸ்ரீ C. வேம்பய்யர் அவர்கள்
மிட்டாதார்
கிருஷ்ணபுரம்

(1941-இல் வசகப்பனேரி கோயில்களில்
கும்பாபிஷேகம் நடத்திய பெரியார்)

வசகப்பனேரி ஸ்வாமி ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயிலில் 1941 & 1978 ஆகிய வருடங்களில் நடைபெற்ற குடமுழுக்குப் பெருவிழாக்களுக்குப் பெரிதும் பக்க பலமாக உழைத்த பக்தர் தேர்க்கன்குளம் நிலக்கிழார் சு. முத்துசுவாமி ரெட்டியார்.

கண்டதும்... கேட்டதும்... செய்ததும்...



வி. எஸ். மணி ஐயர்
கிருஷ்ணபுரம்.

''ஓம் பத்ரங் கர்ணேபி: ச்ருனுயாம தேவா: | பத்ரம் பச்யேமா க்ஷபிர்ய ஜத்ரா : | '' ''தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும். கண்களால் நாங்கள் நல்லதைக் காண வேண்டும்'' என்பது வேத பிரார்த்தனை. இதில் நல்லதைச் செய்யவேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை, தொக்கி நிற்கிறது. ஒருவன் நல்ல காரியம் செய்தால்தானே பிறர் அதைக் காணவும் கேட்கவும் முடியும்!

வசகப்பனேரி ஸ்ரீலக்ஷ்மிநாராயணப் பெருமாள் கும்பாபிஷேக சம்பந்தமாய் நான் கண்டதையும், கேட்டதையும் செய்ததையும் இக்கட்டுரையில் சுருக்கமாக அடக்கமாக விவரித்திருக்கிறேன்.

1941-ஆம் வருடம் விஷுவர்ஷம், வைகாசிமீ 31உ வியாழக்கிழமை, உத்திராட நக்ஷத்திரம், விருஷப லக்னத்தில் என்னுடைய அருமைத் தந்தையார் பெருமாளுக்குக் கும்பாபிஷேகம் அதி விமரிசையாக நடத்தினர்கள். அன்று அவர்களுக்கு நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி அவர்கள் பேருதவி புரிந்தார்கள். மானேஜர் சுந்தரமய்யர், சார் கிருஷ்ணய்யர், ஸ்ரீவைகுண்டம் ஆண்டி அய்யர், திருச்செந்தூர் ச. ராமகிருஷ்ணய்யர் ஆகிய பெரியோர்கள் வேண்டிய காரியங்களைச் செய்தார்கள். குப்பையாண்டி அய்யர், சு. முத்துசாமிரெட்டியார், நாலாவது, ஐந்தாவது ரெட்டியார் சகோதரர்கள் செய்த கைங்கர்யம் மகத்தானது. அதையெல்லாம் நான் சாக்ஷியாக இருந்து பார்த்து வந்தேன். கண்களால் நல்ல காரியங்களைக் காண வேண்டும் என்ற பிரார்த்தனைப்படி நானும் என் பத்னியும் சுமார் 2மாதங்கள் வசகப்பனேரியில் தங்கியிருந்தோம். குடமுழுக்குக்கு முன் இரண்டு வாரங்கள். அதற்குப்பின் ஒரு மண்டலம். எங்களுக்கு உதவியாகவும் ''விழுத்துணை''யாகவும் சார் கிருஷ்ணய்யர் தம்பதிகளும் உடனிருந்தனர். அவப்பொழுதும் தவப்பொழுதாய் கழிந்தது. தினமும் இருவேளையும் ஸ்வாமி

தர்சனம், திருவாராதனம் பார்க்கப் பதினு யிரம் கண்கள் வேண்டும். என்னுடைய வாழ்க்கையிலேயே பசுமையான நாட்கள் அவை. பொன்னேடுகளில் மாணிக்க லிபிகளால் பொறிக்கப்பட வேண்டியவை. Black and whiteஇல் ஆவது இருக் கட்டுமே என்று இங்கு எழுதுகிறேன்.

அன்று நடத்தப்பட்ட கும்பாபிஷேகத் திற்குக் கூட்டம் அதிகம். போக்குவரத்து சௌகர்யங்கள் ரொம்பவும் குறைந்திருந்த போதிலும் பெருங்கூட்டம் நடந்தும் வண்டிகளிலும் வந்தது; அன்றைய பக்திப் பெருக்குக்கு உதாரணமாக விளங்கியது. இன்றோ கூட்டம் குறைவுதான். தேர்க்கன் குளம்வரை பேருந்துகள் வந்தும், கோவில் வாசல் வரையில் மோட்டார்கார் வருவ தற்குள்ள சௌகர்யம் இருந்தும், மெய்யன் பர் குறைவதற்குக் காரணம் என்னவோ? 37 ஆண்டுகள் சென்று விட்டதால் கலியின்வேகம் அதிகரித்து பக்தி குறைந் திருக்கலாம்; அல்லது அதே முகூர்த்தத் தில் பல இடங்களில் குடமுழுக்குகளும் விவாஹ உபநயனங்கள் நடந்ததாலும் வருகை குறைந்திருக்கலாம். ஏதானுலும் கும்பாபிஷேகம் காளயுக்தி வர்ஷம் 1153 ஹு வைகாசி மீ 26 உ வெள்ளிக்கிழமை புனர்பூச நக்ஷத்திரமும். விருஷப லக்னத் தில் காலை 6-15 மணிக்கு சிறப்பாக நடந்தேறியது. எல்லா மூர்த்திகளுக்கும் ஒரே நேரத்தில் வேதகோஷத்துடன் வான வேடிக்கைகள் முழங்க, சுமங்கலிகள் மங்க ளம் பாட திராவிடவேதம் ஒலிக்க, மிக விமரி சையாக கும்பாபிஷேகம் நடந்தது. கண் கொள்ளாக் காட்சிதான்; அதில் சந்தே கமேயில்லை. பக்தகோடிகள் அனைவரும் தரிசித்துப் புளகாங்கிதமடைந்தனர். சந்தோஷம் மேலிட்டு என்னை பாராட்டி யும் புகழ்ந்தும் ஆசீர்வதித்தனர். அன் றைய இரவில் பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது எனக்கு விலை உயர்ந்த பொன்னுடையும் போர்த்திக் கௌரவித் தார்கள். என்னுடைய மனமார்ந்த நன்றியை இங்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்துக் கேட்டதைப்பற்றி விவரிக் கிறேன். 1941ஆம் வருஷத்திய கும்பாபி ஷேகத்தில் வேதகோஷம் மிகவும் கம்பீர மாக ஒலித்தது. எட்டுத் திக்கும் அதிர முழங்கியது. 1978இல் அந்த ஓசை கேட்கவில்லை. வேதம் ஓதுதல் குறைந்து வருவதே காரணம். அது மீண்டும் வலி மையுடன் ஒலிக்க ஆவன செய்ய வேண் டியது நம் கடமையல்லவா? 1978-ல் நூதனமாக சுக்லயஜுர் வேதம் ஓதுவதற் கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது மிகவும் சிறப்பாகயிருந்தது. நன்ருகவும் பாராயணம் செய்தார்கள். திராவிட வேதங்களையும் பாராயணம் செய்யும் போது அருகிலிருந்து கேட்கும் பேறு பெற்றேன். புதிதாக தேவி மகாத்மிய படனமும் நடந்தது.

ஊர் பெயர் வசகப்பனேரி என்று வழக்கில் இருந்தாலும் அரசு ஆவணங் களில் வசவப்பநேரி என்று தான் இருக் கிறது. அதுபோல் பெருமாளுக்குப் பெயர் சாஸ்திரப்படி "ஸ்ரீதேவி பூதேவி ஸமேத வேங்கடாசலபதி" என்று தான் பெரிய வர்கள், இலத்தூர் வரதராஜபட்டர் (1941 இல் கும்பாபிஷேகம் நடத்திய ஆசாரியர்) முதலியோர் சொல்லிக் கேட்டது ஞாபக மிருக்கின்றது. ஆனல் கிராமத்தார்கள் ஸ்ரீலக்ஷ்மிநாராயணப் பெருமாள் என்று பக்தியுடன் அழைத்து வருகின்றனர். அதிலும் சில வித்தியாசங்கள் இருக்கின் றன. யாதவர்கள், தேவர்கள் முதலி யோர் லக்ஷ்மணப் பெருமாள் என்று தான் கூறுகின்றனர். அவர்களுடைய ஸந்தானங்களுக்கும் லக்ஷ்மணன் என்று தான் பெருமாள் பெயரை சூட்டுவதாக எண்ணிச் சூட்டுகின்ருர்கள். இந்த வழக்கம் இப்போதும் இருக்கின்றது. பிராமண சமூகத்தாரும் தங்கள் குழந்தைகளுக்கு 'லக்ஷ்மணன்' என்று தான் சென்ற தலை

முறை வரைக்கும் பெயர்சூட்டிவந்தார்கள். ஆனால் இன்றைய தலைமுறையில் பிராமணர்கள் லக்ஷ்மிநாராயணன் என்றுதான் பெயர் சூட்டுகின்றார்கள். ஆகையினால் தற்போது லக்ஷ்மிநாராயணப் பெருமாள் என்ற நாமமே நிலைத்துவிட்டது. மிகவும் பிரபலமாகியும் விட்டது. கும்பாபிஷேக சமயத்திலும் ஸங்கல்பத்திலும் அந்த நாமதேயமே வைதிகர்களாலும் கூறப்பட்டது. வாசகர்களுக்கு எந்தப் பெயர் சொல்லி அழைப்பது என்னும் சந்தேகம் வேண்டாம். எம்பெருமான் அனந்த நாமாக்களையுடையவன். பக்தர்கள் ஸஹஸ்ரநாமங்கள் சொல்லி அவன் புகழ் பாடுகின்றனர். நாம் விரும்பும் எப்பெயரும் எவ்வுருவமும் ஏற்று வரத் தயாராக இருக்கிறான் அவன். நம்மாழ்வார் ''பேரும் பலபலவே, பலபலவே சோதி வடிவு; உமர் உகந்து உகந்த உருவம் நின் உருவம் ஆகி, மாயன் நாமம் ஒன்றும் ஓராயிரம்'' என்றும் கூறுகின்றாரல்லவா!

இனி நான் கேட்ட மற்றொரு முக்கியமான செய்தி. நம்முடைய மூதாதையர்கள் வசகப்பனேரிக்கு வருவதற்கு முன்னால் கருங்குளத்தில் தான் வசித்துவந்தார்கள். அந்த கிராமத்தில் வடமர்கள் அதிகம். நம்மவர் சுருக்கம். ஒரே ஒரு தெலுங்கர் வீடு. சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினருக்கும் ஒரு சிறு தகராறு ஏற்படவே. நம்மவர்கள் கருங்குளத்தை விட்டு வெளியேறினார்கள். ஒரு பகுதி பேய்க்குளம் என்ற ஸ்ரீ வேங்கடேசபுரத்தில் குடியேறினார்கள். மற்றொரு பகுதி வசகப்பனேரியில் குடியேறினார்கள். எல்லாருமே வசகப்பனேரிக்குத்தான் வந்தார்கள் என்றும் சொல்கின்றார்கள். எஃது உண்மை என்று இப்போது நமக்குச் சொல்ல முடியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது. அதாவது வசகப்பனேரிக்கு வருவதற்கு முன்னால் கருங்குளத்தில் இருந்தார்கள் என்பதும் அங்கு எழுந்தருளியிருக்கும் வேங்கடாசலபதியைக் குல தெய்வமாகக் கொண்டிருந்தார்கள் என்பதும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மை! இப்போதும் கருங்குளத்துக்குச் சென்றால் சோழியர் வீடு என்று ஒரு வீட்டைக் குறிப்பிட்டுக் காண்பிக்கின்றனர். தவிரவும் அங்குள்ள வயதான பெரியவர்கள் நம்மிடம் பேசும் போது அன்புடனும் ஆதரவுடனும் அளவளாவுகின்றனர். தவிரவும், ''இங்கேயிருந்து வெளியேறி வசகப்பனேரிக்குப் போயும், பெருமாளை மறக்காமல் குல தெய்வமாக வைத்துப் போற்றி வழிபடுகின்றீர்களே!'' என்றும் பாராட்டுகின்றனர்.

இனியொரு மிக்க மகிழ்ச்சிகரமான செய்தி. என் தந்தையின் இளைய பாட்டனார் லக்ஷ்மணய்யர் என்பவர் மிகுந்த பக்திமான். தினமும் பூணூல் தன் கையாலேயே நூற்றுப் பெருமாளுக்குச் சாற்றுவார். திருவாராதானம் கழிந்து தான் உணவருந்துவார். நிரம்ப ஈடுபாடு. கல்யாணம் செய்து கொள்ள அவசியமும் அவகாசமும் ஏற்படவில்லை அவருக்கு. எல்லாம் பெருமாள்தான் அவருக்கு. 'மாதா, பிதா, பந்து, மனைவி, மக்கள், மற்ற உறவு, சுற்றம், நட்பு எல்லாம் அவனே!' என்று நம்பி வாழ்க்கை நடத்தினார். சுமார் 90 வருஷங்கள் வாழ்ந்து ''ஒழிவில் காலமெல்லாம் உடலாய் மன்னி'' பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்து வந்தார். ஒருநாள் கோவிலுக்குச் சென்று பூணூல் சாற்றிவிட்டு. தர்சனம் செய்து வீட்டுக்கு வந்து உணவருந்தி பூஜை அறையில் அமர்ந்து ''லக்ஷ்மணா! லக்ஷ்மணா! இதோ வருகிறேன்! வந்துவிட்டேன்'' என்று இருமுறை கூவினார். ஆவியும் பிரிந்தது. ஆன்மா அவன் திருவடியை அடைந்தது. அமரரானார். இந்த நிகழ்ச்சியை என் தந்தையார் விவரிக்கக் கேட்டேன். இப்போதும் என் செவிகளில் ''லக்ஷ்மணா! லக்ஷ்மணா'' என்ற பெயர் ஒலிக்கின்றது. அவ்வளவு பக்தி! அவ்வளவு ஈடுபாடு அவருக்கு. அவருடைய வம்சத்தில் பிறந்ததில் பெருமை கொள்கிறேன். அவருடைய புண்ணியத்தினால்

தான் என் தந்தைக்கு 1941-லும், அடியேனுக்கு 1978-இலும் பெருமாளுக்குக் குடமுழுக்கு நடத்திவைக்கும் பெரும்பேறு கிடைத்ததாக எண்ணுகின்றேன்,

கடைசியாக செய்தது என்ற பகுதிக்கு வருவோம். ''நன்றே செய்வாய், பிழை செய்வாய்! நானோ இதற்கு நாயகமே!,'' என்றபடி நான் என்ன செய்தேன்? என்றால் ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்கமுடியுமா? எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. என்னை ஒரு கருவியாக வைத்துக்கொண்டான். அவ்வளவுதான். என்னுடைய முன்னோர்கள் செய்த பூஜாபலத்தினால் எனக்கு அந்த வாய்ப்பைத் தந்தான். பகவான் கீதையில் ''நிமித்த மாத்ரம் பவ ஸவ்யஸாசின்'' என்றபடி என்னையும் ஆட்கொண்டான். அவ்வளவே! சென்ற வருஷம் வருஷாபிஷேகத்தின்போது கூட்டம் நடத்திக் குடமுழுக்கு, திருப்பணிகள் செய்ய ஸங்கல்ப்பம். பிறகு பண வசூல்; பரிஹாரங்கள்; ஜோதிஷ பிரச்னங்கள்; திருப்பணிகள் ஆரம்பம்; விமான பாலாலயம் இப்படியாக எல்லாக் காரியங்களையும் முறையாக நடத்திக்கொண்டான். எவ்வளவோ விக்கினங்கள் வந்தும் அவைகளை நீக்கிக் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட முகூர்த்தங்களில் வைபவங்களை விமரிசையாகச் செய்துகொண்டான். கடைசியில் ஒரு விதமாகத் திருப்பணிகளை பூர்த்திசெய்து 9—6—78ல் திவ்வியமான முகூர்த்தத்தில் குடமுழுக்கும் பிறகு 41 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடத்தித் தன்னுடைய ஸங்கல்ப்பத்தை நிறைவேற்றிக்கொண்டான். 41-ஆவது நாளன்று புஷ்பாஞ்சலியும் லக்ஷார்ச்சனைகளும் நடத்தத் திருவுள்ளம் கொண்டு அந்தக் கண்கொள்ளா காட்சியையும் நமக்குத் தந்து அனுக்ரஹம் செய்தான். எல்லாம் அவன் நேரில் வந்து செய்தானா? இல்லை. பொம்மலாட்டத்தில் திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு கயிறுகளை இழுத்து பொம்மைகளை ஆட்டுவதுபோல் எம்பெருமானும் தெய்வம் மனுஷ்ய ரூபேண என்றபடி நம்மை ஆட்டுவித்தான். ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே'' என்ற வசனப்படி நாம் ஆடினோம், பாடினோம், அங்குற்றோம், இங்குற்றோம், ஓடியாடி கைங்கர்யங்களைச் செய்தோம். காரியங்கள் எல்லாம் செவ்வையாக திறமையாக சிறப்பாக விமரிசையாக நடந்தன. எல்லாம் அவனே நடத்திக்கொண்டான். அவன் புகழ் பாடுவோம்.

அடியேன் கடமை என்னவென்றால் கூடச் செயலாற்றிய அங்கத்தினர்களுக்கும் மற்றும் எல்லாருக்கும் நன்றி நவில்வது தான். ''தலையல்லால் கைம்மாறு இலேன்''.

தென்காசி கோவிலில் பராக்கிரம பாண்டியன் கல்மேல் எழுத்தாகச் செதுக்கி வைத்திருக்கிறான். அருமையான பாடல்கள்:

1. ''சேலேறிய வயல் தென்காசி ஆலயம்
தெய்வச் செயலாலே சமைந்ததிங்கு
என் செயலல்ல இதனை இன்ன
மேலே விரிவு செய்தே புரப்பாரடி
வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம
பாண்டியனே!!

2. ஆராயினுமிந்தத் தென்காசி மேவும்
பொன்னாலயத்து
வாராததோர் குற்றம் வந்தாலப்போ
தங்குவந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்பார்களை
நீதியுடன் பாரறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே''

பாண்டிய மன்னனைப் போல் நானும் இனி வரும் சந்ததியர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோவில் ஜீர்ணோத்தாரணமும் கும்பாபிஷேகமும் என் செயல் அல்ல. தெய்வச்செயல். நீங்கள் அதனை விரிவு செய்து காப்பாற்ற வேண்டும். ஏதாவது குற்றம் நேர்ந்தால் அதை நீக்கி பரிபாலிக்க வேண்டும். அப்படிச் செய்பவர்களின் காலடிகளில் விழுந்து வணங்குகிறேன். இது என்னுடைய அன்பார்ந்த வேண்டுகோள். நம் வாரிசுகள் அதைச் செய்வார்கள் என்னும் முழு நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன். வணக்கம்.

மிருத்ஸங்கிரஹணம்

யாகசாலைக் காட்சி



யாகசாலை பூர்ணாஹுதி



கலச பூஜை



கோவில் திருப்பணி

வித்வான் ல. சண்முக சுந்தரம்,
தென்காசி.

இது 1978ஆம் ஆண்டு. நம்முடைய வாழ்க்கையில் வேண்டாத அம்சங்கள் எத்தனையோ புகுந்து நம்மை ஆதிக்கம் செய்கின்றன. கடந்த முப்பது நாற்பது ஆண்டு களாகவே நாம் அவற்றிற்கு அடிமையாகி விட்டோம்.

கார் என்றும், டெலிபோன் என்றும், அரசியல் என்றும், கிளப் என்றும், சீட்டாட்டம் என்றும், சினிமா என்றும், டெலிவிஷன் என்றும், பங்களா என்றும், அல்செஷன் என்றும், புதிய புதிய அவதா ரத்தில் வந்து நம்மைக் குரங்காட்டம் ஆட்டுகின்றன அவை.

நம்மோடு உடன்பிறந்த பிறப்புகள் போலவும், இவை இல்லா விட்டால் நம்மு டைய வாழ்க்கையே வாழ்க்கை ஆகாது போலவும், நம்மை வசியப் படுத்திக் கொண்டிருக்கின்றன, மேலே குறிப்பிட்ட அம்சங்கள்.

இதைப்போல வடிகட்டிய ஏமாளித் தனம் ஒன்று உண்டா? எல்லாம் ஆங்கிலக் கல்வி காரணமாகவும் ஆங்கில நடை உடை காரணமாகவும் விளைந்த விபரீ தங்கள்தாம்.

மனுஷ வாழ்க்கையில் ஆரோக்கியத் தையும், திருப்தியையும் உண்டாக்க வேண்டும் யந்திரஞானம். ஆனல் பேரா சையும் பற்ருக்குறையுந்தான் கிடைத்த பலன்.

மேலே குறிப்பிட்ட விபரீதங் காரண மாக, கோவிலைப் பற்றிய நினைப்பே நம்மைவிட்டு ஒதுங்கி விட்டது. சில சம யம் அது தலையை நீட்டினலும், பொழுது போக்கும் இடமாகத்தான் கோவிலைப் பற்றிய நினைப்பு வருகிறது.

நம்முடைய வாழ்க்கையோடு வாழ்க் கையாக ஒட்டியிருக்கிற அற்புதமல்லவா கோவில்! நமது முன்னேர்களின் அனுப வமும் ஆனந்தமும் சேர்ந்தெடுத்த அவ தாரமல்லவா கோவில் என்னும் உண்மை உணர்வு நமக்கு விளங்குவதில்லை.

நாம் வாழும் இந்த வாழ்க்கைக்கு மேலான ஒன்று இருக்கிறது. அதிலுள்ள அனுபவமும் ஆனந்தமுந்தான் உண்மை. அந்த உண்மையை அனுபவிக்கவும் ஆனந்திக்கவும் கொடுத்து வைத்த சாத னந்தான் கோவில் என்னும் ஆர்வம் இதயத்தில் ஊற வேண்டும்.

மேலே குறிப்பிட்ட மெய்யுணர்வு வர வேண்டுமானல், கிளப் முதலியவற் றைக் கொஞ்சம் மறந்து விடவேண்டும். பத்து நாட்களுக்காவது அவற்றிலுள்ள வெறியை ஒதுக்கி வைத்து விடவேண்டும்.

அந்த நாட்களில் கோவிலுக்குப் போக வேண்டும். நண்பர்களோடும், மனைவி மக்களோடும் சேர்ந்து போகவேண்டும். வானளாவி நிமிர்ந்து நிற்கிற கோபு ரத்தைப்பார்க்க வேண்டும். பிராகாரம்

சுற்ற வேண்டும். நாதசுர இசையையும் வாத்ய முழக்கத்தையும் கேட்கவேண்டும். பாசுரங்களையும் பண்ணையும் கேட்டுக் கேட்டு அனுபவிக்க வேண்டும். தீபா ராதனை, அலங்காரம் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துப் பரவசமடைய வேண்டும். வாழ்க்கை என்றால் என்ன? இந்த வாழ்க்கைக்கும் அப்பாலிருக்கிற பேருண்மை எது? அதற்கும் நமக்கும் உள்ள உறவு எப்படி? இவ்வளவும் மெள்ள மெள்ள வெளிப்படும்.

அது மாத்திரமல்ல, தற்காலத்திய சயன்ஸ் விளக்குகின்ற உண்மையும் இன்னதென்று தெரிய வரும்.

பேரண்டம் முழுவதையும் ஆட்டி விளைந்து கொண்டிருப்பது ஒரே ஒரு சக்தி தான். அதுவும் அநாதியான ஒரு நியதி யின்படிதான் ஆட்டுகிறது. விளைந்து பெருகிறது. நம்முடைய உடலில் நிகழும் செயல்கள் உள்ளத்தில் நிகழும் செயல்கள் ஒன்றுவிடாமல், அத்தனையும் அந்த நியதிக்குள் நடைபெறுகிற காரியங்கள் தாம். அணுவிலிருந்து, பேரண்டம் முடிய விரிந்து பரந்துள்ள சக்தியை - நியதியை நமது முன்னோர்கள் அருள் என்று குறிப்பிட்டார்கள்.

அடையாளமாகச் சொல்கிற பொழுது திருவடி என்று குறிப்பிட்டார்கள். எல்லாம் இறைவனுடைய திருவடிக்குள் ஒடுங்கி நிற்பவைதாம் என்று சொன்னார்கள்.

கோவிலில் நின்று சேவிக்கும்பொழுது திருவடி என்பதற்கும் திருவருள் என்ப தற்கும் நேரான பொருள் உண்மையோடு சேர்ந்து வெளிப்பட்டுவிடும்.

உலகில் எங்கும் காணமுடியாத ஒன்றைத் தமிழ்நாடு முழுவதும் பார்க் கிறோம். கோபுரம், கோவில், மூர்த்தி, திருவிழா, வழிபாடு, தேர், இசை, பாட்டு, என்னும் அனுபவமே அது.

சின்னஞ்சிறிய பட்டிக்காடு முதல் பெரிய பெரியபட்டணம் வரை, தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நிறைந்து நிற்கும் காட்சி அது.

இது காரணமாகவே, பக்தர்குழாம், தலயாத்திரை, தீர்த்தயாத்திரை அனுபவம் தொடர்ந்து இருந்து வருகிறது,

இன்னொரு அற்புதமும் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. தமிழ் மக்களின் உணர்ச்சி, சிந்தனை, வாழ்க்கை அவ்வள வும் ரஸமாய் ஊறி ஊறி, இசையாகவும் வார்த்தைகளாகவும், விளைந்து வந்துள்ளன. பல ஆயிரம் ஆண்டுகளா கவே தொடர்ந்து விளைந்துள்ளன. தமிழ் பாஷை என்னும் அற்புதக் கோலத்தில் அவை வடிவெடுத்து நிற்கின்றன.

கோவிலைப் பார்ப்பது போலத் தமிழையும் பார்க்கவேண்டும்; தமிழை அப்படிப் பார்த்து அனுபவித்த உத்தமர் கள், தெள்ளத் தெளியச் சொல்லியிருக் கிறார்கள். ''பக்தியானாலுஞ்சரி, வீரமானா லுஞ்சரி, காதலானாலுஞ்சரி, வேறு எதா னாலுஞ்சரி, விஷயம் மென்பது பொது தான். உலகம் முழுவதற்குமே அது பொதுதான்'' என்று சொல்லியிருக் கிறார்கள்.

''நமது முன்னோர்கள் ஒரு விஷயத் தைப் பார்ப்பதும், அனுபவிப்பதும் அலா தியான முறை. இந்தத் தனித்த பண்பு, தமிழிலுள்ள இசைப் பண்போடும், தாளப் பண்போடும் மருவி விளைகிற விளைவுதான் தமிழ்க்கவி'' என்றும் சொல்லி இருக் கிறார்கள்.

''மலை, கடல், நட்சத்திரம், மனிதன் முதலியவை போல, கவி என்பதும் தனித்த ஒரு தத்துவம். பாஷையே தவ மிருந்து எடுக்கிற அவதாரம் அது'' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

உத்தமர்கள் சொல்லியருளிய இந்த உண்மை விளங்கி விட்டால், தமிழ்ப் பாடலுக்குள்ளிருந்தல்லவா தெய்வம் எட்டிப்பார்க்கிறது என்பது புரிந்துவிடும்.

கோவில் வழிபாட்டிற்கு, நமது ஆடம்பரம் சற்றே விலகி வழிபட வேண்டியுள்ளது. கவிதா இன்பத்திற்கும் அப்படித்தான். ஆடம்பரம் ஒதுங்கி வழிவிட வேண்டியதுதான்.

இது சம்பந்தமாகச் சில பாடல்களைப் பார்ப்போம். 800 ஆண்டுகளுக்கு முன் பிள்ளைபெருமாள் ஐயங்கார் பாடிய வெண்பாக்கள் அவை.

ஒன்றிரண்டு மாதங்களாக, தவிர்க்க முடியாத குடும்ப காரிய நிமித்தம் பக்தர் ஒருவர் கோவிலை மறந்து விட்டார். குடும்ப காரியங்கள் ஒருவாறு முடிந்தன. அவ்வளவுதான். கோவில், வழிபாடு, அடியார் கூட்டம், பாட்டு அவ்வளவிலும் ஆனந்த வேட்கை பொங்கிவருவதைப் போல பீறிட்டு வந்தன.

அப்படியே மூட்டை முடிச்சைக் கட்டினார், பெண்டு பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டார்; திருமால் எழுந்தருளியிருக்கும் ஒவ்வொரு கோவிலுக்குஞ் சென்று எம்பெருமானைச் சேவிக்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தார்.

பெருமாளின் லீலா விநோதங்களை, அடியார்கள் அனுபவித்துச் சொல்லச் சொல்ல, கேட்க வேண்டும் என்கிற காதல் பொங்கி விட்டது பக்தருக்கு.

முதலில் தமது சொந்த ஊரில்— இந்தளூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சேவிக்க வேண்டு மென்னும் ஆத்திரம் வருகிறது.

அடியவருடைய ஆத்திரம் எப்படிப் பாடலாய் உருவெடுக்கிற தென்று பாருங்கள்.

நாடுதும்வா நெஞ்சமே
நாரா யணன்பதிகள்
கூடுதும்வா மெய்யடியார்
கூட்டங்கள் — சூடுதும்வா
வீதி எங்கும் கார் அகிலின்
வீசுபுகை வாசம் எழு
ஆதி இந்த ளூரான்
அடி''

பக்தருடைய ஆனந்தம, தேட்டம், அவசரம் எல்லாமே பாடலில் அழகான பாவத்தில் அமைந்து கிடக்கின்றன.

தோல் சீவிய மாம்பழத்துண்டானு லுஞ்சரி, பலாச்சுளையானுலுஞ்சரி, வாழைப் பழத்தைக்கூட தேனில் ஊறப்போட்டு விட வேண்டியது. ஒருவாரம், இரண்டு வாரம் ஆனுலும் அவை பழுதுபடா. உண்ண உண்ணத் தெவிட்டாத தேவாமிர்தமாக இருக்கும்.

இதயத்தோடு ஒட்டிய உணர்ச்சி, காதலோ, பக்தியோ, வீரமோ எதாக வேண்டுமானுலும் இருக்கலாம். உண்மையோடு ஒட்டிய உணர்ச்சியை இசையோடும், தாளத்தோடும் பொதிந்து கவியுள் வைத்துவிட வேண்டும். பழுதுபடவே படாது. அனுபவிக்க அனுபவிக்க அது அமிர்தந்தான் தேவாமிர்தமேதான்'

மனுஷனையும், மனுஷவாழ்க்கையையும் தெளிவாக ஆராய்ந்துபார்த்தநிபுணர்கள் சொல்கிருர்கள் ''முயற்சி ஒன்றில் தான்—லட்சியத்தோடு ஒட்டிய முயற்சியில் விடாமல் ஈடுபடுகிறவேகம் ஒன்றில்தான் மனுஷதத்துவம் தனித்து நிற்கிறது''

''லட்சியமும், முயற்சியும் இல்லாவிட்டால் மனுஷனுக்கு நிலைப்பும் இல்லை. வரலாறும் இல்லை.''

லட்சியத்திலும் முயற்சியிலும் வெற்றியா, தோல்வியா என்பதல்ல பொருள் ஆனந்தம் ஒன்றுதான் பொருள்.

லட்சியத்தோடு ஒட்டிய செயலையும் வேகத்தையும் நமது கண்களாலேயே நாம் பார்க்க முடிந்து. வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே கன்யாகுமரி வரை பரந்து விரிந்துள்ள இந்த நாட்டைச் சேர்ந்த பலர் தேச விடுதலைக்காகப் போராடினார்கள்.

இளையோர், முதியோர், தாய்மார், ஏழை உழவர், வேலை செய்து பிழைக்கும் தொழிலாளர், வழக்கறிஞர், டாக்டர், பெரிய பெரிய முதலாளிமார், பண்ணையார் இப்படியாக ஒவ்வொரு இனத்தாரும் முயன்று போரிட்டார்கள்.

''நீங்கள் சும்மா இருந்தால் போதும் எவ்வளவோ சௌகர்யமாக நீங்கள் வாழலாம்'' என்று யார் சொன்னாலும் அவர்களால், போராட்டத்தை விடமுடிந்ததா?

அப்படி ஒதுங்கி ஒளிவது கேவலமான இழிதகைமையாக அவர்களுக்குப்பட்டது. தடியடியும் சிறையும் அவர்களுக்கு தேவாமிர்தமாக இருந்தன. பதவியோ, சம்பாத்தியமோ அவர்களை மயக்க முடியவில்லை. கடலைப் பிண்ணாக்கு போலவும், வேப்பங்காய்ப் போலவும் அவர்களுக்கு அவை கசந்தன.

லட்சியமே அவர்களுக்கு ஞானம், முயற்சியே தவம். தேச விடுதலையைப் போல கோவில் வழிபாடும் லட்சியந்தான். நிரந்தரமான லட்சியமும் ஆகும். கோவில் வழிபாடு காரணமாகவே, யாத்திரை, தொண்டு, பக்தி அவ்வளவும் ஜாம் ஜாம் என்று முழங்கிய வண்ணம் உள்ளன.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பெயர்கள் கோவிலையும் வழிபாட்டையும் நோக்கி நிற்பவைதாம்.

கோவிலுக்குச் சென்று மூர்த்தியை வழிபட்டு, பாடலையும் பண்ணையும் பருகிப் பருகித் திளைக்கிற ஒருவரால் வழிபாட்டை ஒதுக்கிவைக்க முடியாது. எம். எல். ஏ பதவிக்காக வழிபாட்டிலிருந்து நழுவிவிட முடியாது. இளமையும் விறுவிறுப்பும் நஷ்டமாகிவிடுமே என்று பயப்படவும் மாட்டார். புறக்கணிக்கவும் மாட்டார். வழிபாட்டில் திளைக்கும் மனிதர்.

இந்தளூர் என்பது சோழ நாட்டிலுள்ள வைஷ்ணவஸ்தலம். திருக்கண்ணபுரமும் சோழநாட்டிலுள்ளதுதான்.

பக்தர் ஒருவர் திருக்கண்ணபுரத்திற்கு வந்து சேர்ந்தார். கோவிலுக்குப் போனார். பெருமாளைச் சேவித்தார். பேரானந்தத்தில் திளைத்தார். அவருடைய ஆனந்தம் தாளத்தோடும், இசையோடும் தாண்டவமாடிக் கொண்டு வருகிறது.

எப்படி வருகிறது என்று பாடலிலேயே பார்ப்போம்.

''பேறு தரினும்
பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும்
விடேன்கண்டாய் — ஏறுநீர்
வண்ணனே கண்ணபுர
மாலே எமைப்புரக்கும்
கண்ணனே உன்தன்
கழல்''

[பேறுதரினும்–கைநிறையப் பாக்கியத்தை அள்ளிக்கொடுத்தாலும் சரி. ஏறு நீர் வண்ணன்–நீருண்ட மேகம் போன்ற சாமள நிறம். எமைப்புரக்கும்–பரம்பரை பரம்பரையாக எங்களைக் காப்பாற்றக் கடமைப்பட்ட]

அற்புதமான பாடல்! உன்தன் கழல்' என்று பாட்டை நிறுத்திவிட முடியாது. 'பேறுதரினும்' என்று ஆரம்பிக்க வேண்டியதுதான். மறுபடி மறுபடி ஆரம்பிக்க வேண்டியதுதான். நிற்கிற காரியமாக இல்லையே; ஓயாது, நாவில் வட்டம் போட்டுக் கொண்டிருக்கிறதே பாட்டு என்று சொல்லத் தோன்றும்.

வழிபாடும், தமிழும், அப்படிக் கலந்து கிடக்கின்றன பாடலில்.

கண்ணபிரானிடத்தில் நேருக்குநேராக நின்று, பக்தரை அப்படி உறுதியோடு அடித்துச் சொல்ல வைக்கிறது தமிழ்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்ர பர்ணிக்கரையில் இருக்கிறது ஆழ்வார் திருநகரி. நீர் வளம் நிலவளம் எல்லாம் நிறைந்த இடந்தான் ஆழ்வார் திருநகரி.

குருகூர், தண்குருகூர் என்னும் பெயர் கள் இந்த இடத்தின் செழிப்பைக் காட்டு கின்றன.

நம்மாழ்வார் பிறந்தது இந்தக் குருகூ ரில்தான். திருமாலின் கல்யாண குணங் களில் தீராக்காதல் கொண்டு அதை அனு பவித்து அனுபவித்து மாந்தியவர் இந்தக் குருகூர் நம்பி.

இறையருள் ஈடுபாட்டில் தம்மையே மறந்து தம்மை முற்றிலும் இழந்துவிட்ட துறவாளர் இவர்.

கல்யாணம் செய்துகொள்ள வேண்டும், பேரன் பேத்தி எடுக்கவேண்டும், சொத்துச் சுகம் சேர்க்க வேண்டும் என்கிற ஆசை யெல்லாம் இவரைவிட்டுப் பறந்து போய் விட்டன.

மனித குலத்தின் மீதும் இந்தத் துற வாளருக்குத் தீராத காதல் தான். காதல் காரணமாகவே தாம் அனுபவித்த பெருமா னின் திவ்விய பிரசாதத்தை ஆயிரம் பாசுரங்களாக வழங்கினர்.

நம்மாழ்வாரின் பாசுரங்களைப் பாடி அனுபவிக்கும் பக்தர்கள் ஒவ்வொரு பாசு ரத்திலும் திருமால் ஒவ்வொரு கோலத்தில் அவதாரம் எடுத்து நடமாடுவதாகவே கண்டார்கள்.

திருமாலை அனுபவிப்பது போலவே நம்மாழ்வாரின் பாசுரங்களை நெடுகிலும் அனுபவித்து வந்தார்கள் பக்தர்கள்.

அப்படி அனுபவித்த பக்தர் ஒருவர்,

“பிறவாத பேறு
 பெறுதற்(கு)எஞ் ஞான்றும்
மறவா(து) இறைஞ்சென்
 மனனே — துறவாளன்
அன்புருவாய் பாசுரங்கள்
 ஆயிரமும் பாடிய
தண்குருகூர் நம்பிதிருத்
 தாள்”

நம்மாழ்வாரின் பாசுரம் ஒவ்வொன்றும் திருமாலாகவே இருக்கின்றன பக்தருக்கு. விமோசனம் வேண்டுமானல் நம்மாழ்வார் தான் கதி என்னும் உறுதி, பக்தரின் இதயத் தைப் பிசைந்து குழைக்கிறது.

பக்தரின் உறுதியும் நெகிழ்ச்சியும் பளிங்கில் நின்று ஒளி வீசுவது போல பாட்டில் நின்று ஒளி வீசுகின்றன. இனி கடைசியாக ஒரு பாட்டு.

கடவுளுடைய அருள் ஒன்றுதான் உண்மை. அதை அனுபவிப்பது தான் ஆனந்தம். இந்த ஆனந்தத்தைப் பெற வேண்டுமென்னும் ஆசையோடு எண் சாணுடம்பையே சொன்னபடி ஆட வைக்கிருர்கள் சிலர். ஐம்புலன்களையும் வசக்கி ஹடயோகம் முதலிய செயல்களில் ஈடுபடுகிருர்கள் அவர்கள்.

தாடி வளர்த்தும் பட்டினி கிடந்தும் நீரிடைநின்றும் நெருப்பினை (குண்டலி னியை)க் கிளப்பியும், தவம் தவம் என்று முழங்குகிறவர்களும் உண்டு.

செயலைப்பார்த்தால் பிரமிப்பாகத்தான் இருக்கிறது. பலன் என்னவோ பூஜ்யந்தான்.

கடவுளுடைய அருளும் ஆனந்தமும் கலை உணர்வும் பக்தி, வழிபாடு ஆகிய பாதைகளின் மூலந்தான் வந்து சேரும்.

எட்டாத தொலைவிலுள்ள திருவாதிரை நட்சத்திரக் கூட்டத்தில் வைத்து

இறைவனை வழிபட்டார்கள் முன்னோர்கள். அதுபோதவில்லை. தாண்டவகோலத்தில் நடராஜமூர்த்தியாக வைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது. ஓவியத்தில் எழுதியும் அனுபவிக்க வேண்டி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கவியில் வைத்துப் பார்த்து அனுபவிக்கிற பொழுதுதான் ஒட்டி உறவாடுகிற திருப்தி ஏற்படுகிறது.

கடவுளுக்கும் மனிதனுக்கும் கலை ஒன்றுதான் அதாவது கவி என்கிற ஒன்றே ஒன்றுதான், திருமண மேடையாக விளங்குகிறது.

இது சம்பந்தமாகப் பக்தருடைய அனுபவம் என்ன என்பதைப் பார்ப்போம்.

ஆறன்விளை என்னும் ஸ்தலம் மலை நாட்டில் இருக்கிறது. அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாளைச் சேவித்துச் சேவித்து பூரண இன்பம் பெற்றவர் பக்தர்.

சேவிக்கிற பொழுதெல்லாம் நம்மாழ்வாருடைய பாசுரங்கள் காதில் விழுந்தன. உள்ளமெல்லாம் உருகி உருகிக் கரைந்து விட்டது பக்தருக்கு.

பாசுரங்களை அனுபவிக்காதவர்களுக்கு, பெருமாளுஞ்சரி, பெருமாளின் திருவருளுஞ் சரி, ஒரே அமாவாசை இருட்டுத்தான் என்று வாக்கு மூலங்கொடுக்கிறார் பக்தர். சந்நிதியில் நின்றே வாக்கு மூலங் கொடுக்கிறார் பக்தர்.

''சென்று புனல்மூழ்கிச்
செய்தவங்கள் செய்தாலும்
வென்று புலனடக்கி
விட்டாலும் — இன்தமிழால்
மாறன் இசைத்த
மறைஓதார்க்(கு) இல்லை; திரு
ஆறன் விளைஅமர்வான்
அன்பு

[மாறன்–நம்மாழ்வார், மறை–பாசுரம்]

அற்புதமான பாடல், நான்கு பாடல்களுமே வெண்பாக்கள்தாம். வெண்பாவை இரண்டிரண்டு சீராகப் பிரித்து நிதானமாகப் பாடவேண்டும். தெரிந்த முறையில், சாவேரியிலோ, சங்கராபரணத்திலோ, மத்திமாவதியிலோ பாடினால் போதும். பாய்ச்சலோ, துள்ளலோ, உருட்டலோ, போட்டுக்குழப்ப வேண்டியதில்லை.

இயல்பான முறையில் நிறுத்திப் பாடப் பாட கவிக் குளிருக்கிற சங்கீதம் வெளிப்படும். இசைக்குளிருக்கிற இயல்பான தாளமும் சேர்ந்து வெளிப்படவே செய்யும்.

பக்தருடைய ஆனந்தம் நமக்கும் பொது என்று ஆகிவிடும்.

கவியை அனுபவிக்க ஆயுள் நாள் போதாதே என்று ஏங்க வேண்டியதுதான். கவியையும் கோவிலையும் அனுபவிக்க —மேலும் மேலும் அனுபவிக்க நான் தொடர்ந்து தமிழ் நாட்டில் பிறக்க அருள் புரியும் பெருமானே என்று முறையிடத் தோன்றும்.

''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்று அப்பர் சுவாமிகள் சும்மாவா கதறினார்?

வழிபடுவதற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட கூடாரமல்ல நமது கோவில்கள். விஷயத்திற்கு விளக்கங் கொடுக்க வந்த அகராதியல்ல நமது பாடல்கள்.

உயர்ந்த லட்சியத்திற்காகவும், ஆனந்தத்திற்காகவும், ஒரு இனத்தார் அவ்வளவு பேரும் ஒன்று சேர்ந்து எடுத்த அவதாரந்தான் கோவில். அந்த இனத்தாரின் ஆர்வங்களும், தேட்டங்களும், ஆனந்தங்களும் தமிழோடு சேர்ந்தெடுத்த அவதாரங்கள் தாம் தமிழ்ப் பாசுரங்கள்.

இந்த இரண்டும் நமக்குத்துணையாக நிற்கின்றன. வேறு என்ன வேண்டும் நமக்கு?

கிருஷ்ணாபுரம் மிட்டாதார். திரு. V.S. மணிஐயர் அவர்கள் லட்சாதிபதிதான். கோடீஸ்வரர் என்றுஞ் சொல்லலாம்.

திருவாளர், மணிஐயரவர்களின், கல்வி, பண்பாடு, பக்தி, எளிமை முதலிய அருங் குணங்களை எண்ணிப்பார்த்தால், லட்சம், கோடி என்பவை சாதாரணம் என்று தெரிந்துவிடும் விலை மதிக்க முடியாத அப்படி ஒரு செல்வத்திற்கு அதிபதியாக விளங்குகிறார்கள் ஸ்ரீமான் மணி ஐயர் அவர்கள்.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, வசகப்பனேரி, ஸ்ரீலெட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்கிறார்கள் ஸ்ரீமான் ஐயரவர்கள்.

தெய்வத்திற்கு உகந்த தர்ம கைங்கர்யங்கள் பலவற்றை ஐயரவர்கள் செய்து வருகிறார்கள். ஆலயத்திருப்பணி அவற்றில் ஒன்று.

ஐயரவர்களின் வளமான கொடையையும், திருப்பணியையும் பார்க்கிற பொழுது, இது 1978-ம் வருடந்தானா என்று சந்தேகம் வருகிறது.

கிருதயுகம் திரும்பவும் வந்துவிட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

பக்திக்கும், பக்தகோடிகளுக்கும் இன்பமயமான பொற்காலந்தான்.

மூர்த்தி பூஜை

K. S. வெங்கடராம சாஸ்திரி
உதவி ஆசிரியர்: ''ஸ்ரீசங்கர க்ருபா''
ஸ்ரீரங்கம்.

○

நம் பாரத பூமியில் அநாதி காலந் தொட்டு ஒவ்வோர் ஊரிலும் தேவாலயங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு முனையில் ஹரியின் ஆலயமும் (பெருமாள் கோவிலும்) ஹரனின் ஆலயமும் (சிவன் கோவிலும்) இருக்கும். அதனுல்தான் கிராமத்திற்கு 'அக்ரஹாரம்' என்று பெயர் வந்தது. இது தவிர பிள்ளையார் கோவில்களும் கிராம தேவதைகளின் கோவில்களும் உள்ளன. முக்ய யாத்ரா தலங்களான காசி, இராமேசுவரம், ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலான புண்ய க்ஷேத்திரங்களிலுள்ள திவ்ய மூர்த்திகளை பாரதத்திலுள்ள யாவரும் வழிபடுகின்றனர். இந்த மூர்த்திகள் அநாதிகாலமாக உள்ளதாகவும் சில மூர்த்திகள் ஸ்வயம் வ்யக்த மென்றும் சொல்லப்படுகிறது. புதிதாக பல கோயில்களும் ஆங்காங்கு ஏற்படுகின்றன. புதிதாக ஏற்படும் ஊர்களில் புதிய கோயில்களைக் கட்டுவது நியாயம். ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'', ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று ஒளவைப் பாட்டி கூறியுள்ளாள். ஆனுல் சில ஊர்களில் பழைய கோயில்களில் பூஜைகள் நடைபெருமல் கவனிப்பாரற்று இடிந்து பாழாகி புதர்மண்டிக் கிடக்கின்றன. இந்த இடங்களில் புதிய கோயில்களைக் கட்டுவதைவிட பழைய கோயில்களை புதுப்பிப்பது நல்லது. ஏனெனில் கோயில்களில் பூஜை நடைபெருமலிருந்தாலும், தவருன முறையில் பூஜை நடந்தாலும் தேசத்திற்கு தீங்கு விளையும்.

பாரதத்தில் மிகப்பழைய காலத்தில் கோயில்கள் இருந்தன என்பதை இலக்கியங்களில் காணலாம். ஸ்ரீராமாயணத்தில் தசரதர் இறந்தபின் பரதன் கேகய நாட்டிலிருந்து புறப்பட்டு அயோத்திக்கு வந்ததும் நகரத்தின் நிலையை நேரில் கண்டதும் வருத்தத்துடன் அதைப்பற்றிக் கூறுகையில் ''தேவாலயங்களில் பூஜை நடைபெறவில்லை. ஜனங்கள் தர்சனத்திற்கு வராததால் புழுதிபடிந்து சூன்யமாகக் காட்சியளிக்கிறது'' என்கிருன். ருக்மிணி தன்குல வழக்கப்படி விவாஹத்திற்கு முதல் நாள் அம்பிகையின் ஆலயத்திற்குப் போய் தேவியைப் பூஜித்ததாக சுகாசார்யாள் கூறுகிருர். தேவதைகள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட கோயில்களும் உள்ளன.

புண்ய கர்மவசத்தால் உத்தமமான மனிதப் பிறவியையடைந்த போதிலும் அறியாமையால் துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் நாம், ஈசனின் அருளால்தான் இவ்வுலகில் நன்மைகளைப் பெறவோ, நம்முடைய உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து பிறவியற்ற பேரானந்த நிலையை யடையவோ முடியும். ஈசனது அருளைப் பெறுவது எப்படி? ஆகாயம் போல் உருவமற்றவராகவல்லவா உபநிஷத்துக்கள் அவரைப்பற்றிக் கூறுகின்றன. வாஸ்தவம்தான். அவருக்கு உருவமில்லா விட்டாலும் பக்தர்களுக்கு அருள் புரிவதற்காக தமது மாயையால் பற்பல உருவங்களை எடுத்துக்கொள்கிருர். தேவர்களும்,

ராக்ஷஸர்களும் தம் இஷ்டப்படி உருவ மெடுத்துக்கொள்ளும் பொழுது ஸர்வசக்தனை பகவானைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவர் எங்கும் நிறைந்திருப்பதால் எந்த இடத்திலும் எந்த உருவத்துடனும் தோன்ற முடியும்.

பகவான் உருவமற்றவர் என்ற கருத்தில்தான் நாராயணர் எங்கும் உள்ளார் என்று பிரஹ்லாதர் கூறுகிறார். நம்மைப் போல் பகவானுக்கும் தனிப்பட்டதாக ஓர் உருவமிருக்குமானல் அந்த உருவத்துடன் அவர் எங்குமிருக்க முடியாது. உலகமே அவருடைய உருவம்தான். நரசிம்ம உருவத்துடன் நாராயணர் வைகுண்டத்திலிருந்து வரவில்லை. ஹிரண்யன் தூணை உதைத்ததும் அந்த க்ஷணமே தமது பக்தனை பிரஹ்லாதன் வார்த்தை பொய்யாகாமலிருக்கவும், தாம் எங்குமிருப்பதை உலகிற்குக் காட்டவும் மாயையால் நரஸிம்ம உருவில் தோன்றினர். பின்னர் அந்த உருவம் மறைந்துவிட்டது. பிரஹ்மா கோபர்களையும் கன்றுகளையும் ஒளித்து வைத்தபோது கிருஷ்ணன் அத்தனை கோபர்களாகவும் கன்றுகள்ாகவும் உருவ மெடுத்துக்கொண்டார். தனக்கென உருவமில்லாத பகவான் பக்தர்களுக்காக பற்பல உருவங்களை எடுத்து அருள் புரிகிறார். இக்காலத்திலும் கூட பக்தி முதிர்ந்த சில மஹான்களுக்கு பகவான் காட்சியளிக்கிறார். எல்லாரும் அவரைக் காண முடியாது. நம்மால் காண முடியாவிட்டாலும் நெருப்பினல் சுடும் சக்திபோல் அவர் எல்லா இடத்திலும் இருந்து கொண்டு, எல்லாப் பொருள்களும் தோன்றவும் இயங்கவும் செய்து கொண்டிருக்கிறார். கிருஷ்ண உருவத்தை நேரில் கண்ணால் கண்டபோதிலும் அர்ஜுனன், அவர் காட்டிய விசுவ ரூபத்தை இந்தக் கண்ணால் பார்க்க முடியாமல் அவர் கொடுத்த திவ்யசக்ஷுஸ்ஸால் தான் பார்க்க முடிந்தது.

இந்த நிலையில் நாம் பகவானை எப்படிப் பார்ப்பது? அவர் அருளை எப்படிப் பெறுவது? இதற்காகவே மஹான்கள் பகவானுடைய ஆயிரக்கணக்கான ரூபங்களையும் லக்ஷணங்களையும் நாமாக்களையும் கூறி இவற்றில் ஏதாவது ஒரு ரூபத்தை தியானித்து வந்தால் அவர் மனதில் குடி கொண்டு அருள்செய்வார் என்று உபதேசித்துள்ளார்கள். ''பிரபஞ்சம் நாம ரூபாத்மகம்'' என்று வேதாந்தம் கூறும். பகவானுடைய நாம ரூபங்களைப் பிடித்தால்தான் பிரபஞ்சநாம ரூபங்களைத் தள்ள முடியும்.

மனதையடக்கும் வழி தெரியாமல் தவிக்கும் நாம் எப்படி தியான வழியில் நுழைய முடியும்? நமக்காகவே ஸாளக்ராமம் முதலானவைகளில் பகவானை பூஜை செய்வதற்கு வேண்டிய வழி முறைகளை உபதேசித்திருக்கிறார்கள். இதுவும் தவிர, கோயில் கட்டி, சாஸ்திரங்களில் கூறிய லக்ஷணப்படி சிலையிலோ, உலோஹங்களிலோ பகவானுடைய பிம்பத்தை வடித்து விதிப்படி மந்திரங்களால் பிரதிஷ்டை செய்து தவறாது பூஜை செய்து வந்தால் அங்கு தெய்வ ஸாந்நித்யம் ஏற்படும். சிறப்பாக பூஜை செய்வதாலும், எல்லாரும் சேர்ந்து வழிபாடு செய்து பிரார்த்திப்பதாலும் மஹான்கள் வந்து தர்சித்து பூஜிப்பதாலும் மந்திர மகிமையாலும் கோயில்களிலுள்ள மூர்த்திகளில் ஸாந்நித்யம் அதிகமாகி அதன் மூலம் தேசத்திற்கே நன்மைகள் ஏற்படுகின்றன. மரக்கட்டைக்குள் நெருப்பு இருந்த போதிலும் கடைந்தால்தான் அது வெளிப்படுகிறது. பாலில் நெய் இருந்தாலும் தயிராக்கிக் கடைந்தால்தான் நெய் வெளிப்படுகிறது. கண்ணுக்குத்தெரியாத மின்சாரத்திலிருந்து பல்பு மூலம் வெளிச்சம் கிடைக்கிறது. இதுபோல் எங்குமுள்ள கடவுள் சிலாமூர்த்தியிலு மிருந்த போதிலும் மந்திர மகிமையாலும் பூஜிப்பவர்களின் தவத்தாலும் அங்கு தெய்வஸாந்நித்யம் வலுப்பட்டு தர்சிப்பவர்களுக்கு நன்மைகள் கிடைக்கின்றன. கண்ணப்பருக்கும் மார்க்கண்டேயருக்கும் மூர்த்தியிலிருந்து வெளிப்பட்டு பகவான் அருள் புரியவில்லையா?

இதுதவிர பக்தியிற் சிறந்த மஹான்கள்

வந்து தர்சித்துப் பூஜை செய்வதால் ஸாந் நித்யம் பெருகி அங்கு தெய்வம் பக்தர்களு டன் பேசுகிறது. நாயன்மார்கள், ஆழ்வார் கள் மற்றும் பக்தர்களின் சரித்திரத்தில் இதைக்காணலாம். அவர் பாடியமூர்த்திகள் விளங்கும் ஸ்தலங்களுக்கு தனிப்பட்டதான சிறப்பு இன்றும் உள்ளது. நாம் பகவா னைக் காண முடியாவிட்டாலும் கோயில் களுக்குச் சென்று தேவதாமூர்த்திகளை தர் சித்து வழிபட்டால் தெய்வத்தின் அருள் பெற்று எல்லா நன்மைகளையும் அடைய லாம். ஆனால் மூர்த்தியைப் பார்க்கும் பொழுது கண்காட்சியிலுள்ள பொம்மை யாக எண்ணக்கூடாது. தாய் தந்தை ஆசார்யர் இவர்களைப் பார்க்கும்பொழுது ரக்தம், மாம்ஸம், எலும்புகளையா நினைக் கிறோம்? இதற்கு மேற்பட்ட பூஜிக்கத் தகுந்த சைதன்யத்தையல்லவா பார்க்கி றோம். அதுபோல் மூர்த்தியைப் பார்த் ததும் வெறும் கல்லாக நினைக்காமல் ஈசுவர னாகவே நினைக்க வேண்டும். அவருடைய பெருமைகளை எல்லாம்நினைக்க வேண்டும். இதற்காகவே அவருடைய மஹிமைகளைக் காட்டும்படியான ஏராளமான ஸ்தோத்தி ரங்களை மஹான்கள் இயற்றியுள்ளார்கள்.

கோயில்களில் கட்டிடங்கள் ஜீர்ணமா வது முதலான பலகாரணங்களால் மூர்த்தி யில் தெய்வ ஸாந்நித்யம் குறையலாம். அப் பொழுது கும்பாபிஷேகம் செய்வதன் மூலம் மந்திரமஹிமையால் ஸாந்நித்யம் விருத்தி யாகும். இந்த ரீதியில் கிருஷ்ணபுரம் மிட்டாதார் ஸ்ரீ V. S. மணி அய்யர் அவர்கள் வசகப்பனேரி கிராமத்தில் லக்ஷ்மீநராயணப்பெருமாள் கோயிலில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணி செய்வது தேசத்திற்கே க்ஷேமத்தைக் கொடுக்கும். பிரதிஷ்டை செய்வதாலும் பூஜிப்பதாலும் உண்டாகும் பலன்களைப்பற்றி ஹரிபக்தி ஸுதோதயம் என்னும் புராண நூல் இவ் வாறு கூறுகிறது.

திருக்கோயில் கட்டி பகவன் மூர்த் தியை பிரதிஷ்டைசெய்து வழிபடுவதால் அவர் வம்சம் மட்டுமல்ல,உலகம் முழுவதும் நலனையடைகிறது. இதனால் ஏற்படும் பலன் இவ்வளவுதான் என்று யாராலும் வரையறுத்துக் கூற முடியாது. மூர்த் தியை அர்ச்சிப்பதற்காகக் கோயிலுக்குள் நுழைகிறவன் தாயின் கர்ப்பத்தில் நுழைவ தில்லை. பக்தியுடன் பகவானுக்கு இலையோ, நீரோ எதைக்கொடுத்தாலும் அதனால் பிரீதியடைந்த அவர் தன் ஸ்தானத்தையே கொடுக்கிறார். பக்திக்குத்தான் விலை மதிப்பு உண்டோ?பகவானுக்குஸமர்ப்பித்த தூபப் புகையின் வாசனையை முகர்வது, ஸம்ஸாரமென்னும் பாம்பின் விஷத்தைப் போக்கும் நஸ்யமான (நுகரும்) மருந்தா கும். அவன் ஸந்நிதியில் தீபங்கள் அமைப் பவனுக்கு பாப இருளைப் போக்கும் ஞான ஒளியைக் கொடுக்கிறார். கோயிலில் பிரத க்ஷிணம் செய்கிறவன், ஸம்ஸாரத்தில் அலைவதில்லை. பின்னால் பரமபதத்தில் ஸஞ்ச ரிக்கிறான். ஸாஷ்டாங்க நமஸ்காரத்திற்காக பூமியில் விழும்பொழுது அவனுடைய பாபங்கள் விழுந்து விடுகின்றன. பக்தன் எழுந்திருக்கும் பொழுது அவனுடன் பாபங் கள் கிளம்புவதில்லை. பகவன் மூர்த்தியை அலங்கரித்து பூஜிக்கும் பக்தனைப் பின்னால் விஷ்ணுலோகத்தில் தேவர்கள் அலங்க ரித்துப் பூஜிக்கிறார்கள். பகவான் புகழைப் பாடுகிறவன் தன்னைமட்டுமல்ல, கேட்கும் யாவரையும் புனிதமாக்குகிறான். விஷ்ணு நைவேத்ய பிரஸாதத்தை புஜிப்பது, பாத தீர்த்தத்தை உட்கொள்ளுவது, சூடிக் களைந்த நிர்மால்யத்தை தரிப்பது இம்மூன் றும் எல்லாப் பாபங்களையும் போக்கும். விஷ்ணு பாதஸம்பந்தத்தால்தான் கங்கைக் குச் சிறப்பு. ஆகவே பாததீர்த்தத்தின் மகிமையை யார் வர்ணிக்க முடியும்? விஷ்ணு பாததீர்த்தம் தேவாமிருதத்தை விடச்சிறந்தது. கோவிலில் மெழுகிக் கோலமிடுபவனை விஷ்ணுலோகத்தில் வரவேற்று உபசரிக்கிறார்கள். இவ்வாறு விஷ்ணு கைங்கர்யம் ஒவ்வொன்றும் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறை வேற்றும்.

* * *

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் ஆலய விமான கும்பாபிஷேகம்

ஸ்ரீ மஹா கணபதி

எம்பெருமான் நிர்மால்ய தரிசனம்



சந்தனக் காப்பு
அலங்கார சேவை

ஆலயமும் இறைவனின் உருவ வழிபாடும்

S. ஹரிஹரன், கடையநல்லூரர்

எல்லாம் வல்ல இறைவனும் பரம் பொருள் எங்கும் நிறைந்து நிற்பவன். அந்தப் பரம் பொருளாகிய பிரம்மத்தை அந்நிலையில் அறிந்துகொள்ள அறிவிலிகளான நம்மால் இயலாது. நாம் பிரம்மத்தை உணர்ந்து உய்தற் பொருட்டே பிரம்மம் ஐந்து வித நிலைகளுக்குப் படிப்படியாக இறங்கி வந்து விளங்குகிறது. அவை பரம பதம், வ்யூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பவையாகும். அவற்றில் முதல் நான்கு நிலைகளும் சாதாரண மனிதர்களாகிய நமக்கு அணுகி ரமிக்க முடியாதவை. அர்ச்சை என்ற ஐந்தாவது நிலை தான் நாம் கண் முன் கண்டு கழல் வணங்கி வழிபட்டுக் கடைத்தேறத்தக்க நிலையாகும். பிரம்மத்தின் அந்த அர்ச்சாவதாரம் தான் இப்பரந்த வுலகில் பல வடிவங்களில் பல ஆலயங்களில் பல வீடுகளில் எழுந்தருளி நாம் பிறவிப் பயன் எய்தும் பொருட்டு பல வழிகளிலும் வழிபாடு செய்யப்படுகின்றது.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்'' என்ற வள்ளுவர் வாக்கியப்படி மனிதன் சம்சாரக் கடலிலிருந்து கடைத்தேறி இறைவனுடன் இரண்டறக் கலக்க, மனத்தூய்மையுடன் அவன் தெய்வ வழிபாடு செய்து வர வேண்டியது அவசியமாகிறது. இறைவனை அடைய இருவழிகள் அறிஞரால் காட்டப் பட்டுள்ளன. ஒன்று நிர்குண வழிபாடு, மற்றொன்று ஸகுண வழிபாடு. புலனடக்கத்துடன் இறைவனது நிர்குண நிலையை மனத்துள் ஈடு படுத்தி தன்னுள்ளேயே இறைவனைக்கண்டு களிப்பது, நிர்குண வழிபாடு. சாதாரண மனிதர்களுக்கு இது துர்லபமாகும். இறைவனை நாம ரூபங்களிற் கண்டு புலன்கள் கொண்டு உணர்ந்து மனதில் அன்பு சுரக்கச் செய்து களிப்பது ஸகுண வழிபாடு. இதுவே பற்றுகள் நீங்காத நம் போன்றவர்களுக்கு ஏற்ற வழியாகும். நிர்குண வழிபாட்டின் லக்ஷ்யமும் ஸகுண வழிபாட்டின் லக்ஷ்யமும் உண்மையில் ஒன்றேதான். நாம் கடைத்தேறுவதற்காகவே நம்பால் பரிவுகொண்டு அறிவிற் சிறந்த நம் முன்னோர்கள் அருவ வழிபாட்டை அவர்கள் அறிந்திருந்தாலும், நமக்காக உருவ வழிபாட்டை ஆகம சாஸ்திர விதிப்படி ஏற்படுத்தி அதற்கு சாஸ்திரப்படி தேவாலயங்களையும் அமைத்து அங்கு அர்ச்சா மூர்த்திகளாக விளங்கும் இறைவனின் பலவடிவங்களை பிரதிஷ்டை செய்தும் அவற்றிற்கு தினசரி வழிபாடுகளும் விழாக்களும் ஏற்படுத்தியுள்ளார்கள். அவை நாம் பயனடைந்து உய்யும் பொருட்டு ஏற்பட்டனவே தவிர அனாதியான இறைவனுக்கு அவை எதற்கு?

நாம் பிரயாணம் செய்யும் பொழுது ஆங்காங்கே தேவாலயங்களில் வானுற உயர்ந்து நிற்கும் ராஜகோபுரங்கள் நம் கண்களில் தென்படுகின்றன. அவற்றை நாம் கை கூப்பித் தொழுகிறோம். அங்கங்குள்ள மூர்த்தியை மனத்தில் நினைந்து கொள்கிறோம். கோபுரத்தை தரிசித்து வணங்குவதே அங்கு விளங்கும் அர்ச்சா மூர்த்தியை தொழுவதாகும். நாம் செல்லுமிடமெல்லாம் நமது மனம் பல கோணங்களில் திரியாமல் இறைவனை நினைந்து ஒருமுகமாகத் திரும்ப வேண்டுமென்றே அப்படி எங்கெங்கும் கோயில்களுக்கு உயர்ந்து

நிற்கும் கோபுரங்களை முன்னோர்கள் அமைத்துள்ளனர் போலும்.

அகில அண்டங்களையும் படைத்து, அளித்து, உண்டு, உமிழ்ந்து, காப்பாற்றுகின்ற, எல்லாம் வல்ல இறைவன், மரம், மண், கல், செம்பு, வெள்ளி, தங்கம் சித்திரம் முதலியவற்றில் உருப் பெற்று நமக்குக் காட்சி தருகிருன். நாம் அவனை பக்தி செய்து வணங்கிக் கடைத்தேறுவதற்காக அவனது புகழ்பாட ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அடியார்கள், இவர்களையும் அவ்வப்பொழுது அனுப்பியும் வைக்கிருன். அந்த பக்த சிரோன்மணிகளால் போற்றப்பட்டு பாடல் பெற்ற தலங்கள் தான் இப்பூவுலகில் எத்தனை எத்தனை?

மஹாகவி காளிதாஸன் கூறியது போல் தேவதாமூர்த்திகளுக்குள் உண்மையில் பேதாபேதம் கிடையாது. உயர்வு தாழ்வும் கிடையாது. மனிதனின் மனப்பக்குவத்திற்குத் தக்கபடி விரும்பி வழிபட்டுக் கடைத்தேற வேண்டியே பகவத் ஸ்வரூபங்களில் எண்ணற்ற பிரிவுகளும் உட்பிரிவுகளும் உள்ளன. எல்லாம் ஒரே ஒரு லக்ஷ்யத்தையே அடையும் பல வழிகளாகும்.

ஆகவே அறிவு குன்றிய நம் போன்றவருக்கு இறைவனடி சேர கோயில்களிலும் வீடுகளிலும் குடிகொண்டு விளங்குகின்ற அர்ச்சாவதார மூர்த்திகளே ஊன்று கோலாகும். அவற்றை உள்ளன்புடன் வழிபட்டு உய்வோமாக!

ஓர் ஊருக்குக் கோயிலும் அதன் வழிபாடும் அவசியமானவை என்பதை சிறுவர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்;'' ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது போன்ற முதுமொழிகள் பறைசாற்றுகின்றன.

கிடைத்தற்கரிய பொக்கிஷங்களான ஆலயங்களில் நித்திய வழிபாடு சரிவர நடைபெறுதல் வேண்டும். அடிக்கடி திருப்பணி வேலைகள் நடத்தப்பட வேண்டும். தேவதா சாந்நித்யம் குறையாதிருக்க ஆகமசாஸ்திர விதிப்படி மஹாகும்பாபிஷேகங்களும் மஹா ஸம்ப்ரோக்ஷணங்களும் நடைபெற வேண்டுவதும் அவசியமாகும்.

தாம்ப்ரபர்ணி நதி பாய்வதால் வளம் கொழிக்கும் திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர் வட்டத்தில் அமைந்துள்ள வசகப்பனேரி என்னும் கிராமத்தில் விளங்கும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் தேவாலயத்தில் அவ்வூராராலும் மற்றும் சிறந்த பக்த சிரோன்மணிகளாலும் மேற்கூறியபடி தேவாலயத் திருப்பணிகள் நன்கு செய்யப்பட்டு அர்ச்சாமூர்த்திகளான ஸ்ரீ தேவி பூதேவி ஸமேத ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாளுக்கும் மற்றுமுள்ள மூர்த்திகளுக்கும் மஹாஸம்ப்ரோக்ஷணம் முதலியன வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளது. இது ஸகுண வழிபாட்டுத் துறையின் சிறந்த தொண்டாகும். இதை முன்னின்று நடத்தி வைத்தவர் கடைய நல்லூர் கிருஷ்ணபுரம் மிட்டாதார் ஸ்ரீ V. S. மணி அய்யர் என்ற வள்ளலார்.

அகிலாண்ட கோடி ப்ரம்மாண்ட நாயகனை ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள் அடியார்களான நம்மிடம் அருள் சுரந்து விரும்பிய யாவையும் இம்மையில் ஈந்தும் மறுமையில் நம் எல்லாருக்கும் நற்பதம் நல்கியும் பேரின்பத்தை அருள்பாலிக்கும்படி அவன் அடிமலர் பணிந்து போற்றி வேண்டுவோமாக!

சுபம்.

✲✲

வரம் தரும் பெருமாள்

புலவர் முத்துராமன்

தண்ணர்பொழில் தல வேங்கடமும் காணேன் !
சயனத் திருக்கோல அரங்கனையு மறியேன் !
பெண்ணும் மாமதுரை அழகரையும் பாரேன் !
பெருமைமிகு காஞ்சிநகர் வரதனையும் சேரேன் !
கண்ணரக் கண்டுதொழ சேய்மை என்றிருந்தேன்
கமலமுகங் காட்டியென்றன் கண்ணருகில் வந்தான்
வண்ண நறுந்துழாய் கமழும் வசவப்பநேரியில்
வந்துதித்த பெருமாளை வணங்கிவரம் கொண்டேன்.

ஆழ்வார்கள் பிரபந்த அருட்பாசுரங்க ளறியேன் !
அரசர்கள் போல் கற்றளிகள் எடுக்கவொண்ணச் சிறியேன் !
தாழ்குழலி கோதை பகர் பாவைமொழி புரியேன் !
தானக உணராது பிறர்சொன்னலும் தெரியேன் !
ஏழ்பிறவி பிறந்திளைத்த கடைவாயில் நாயேன் !
இன்றுணர்ந்து வந்தடைந்து எழில் செந்நெல்வயல்கள்
சூழ் பொருநை நதிக்கரையில் வசவப்பநேரியில்
தோன்றிய எம்பெருமானைத் தொழுதுவரம் கொண்டேன்.

நீரெல்லாம் தீர்த்தம் நெற்றியெல்லாம் திருமண்
நினைவெல்லாம் திருமால் உரைப்பதவன் பல்லாண்டு
தாரெல்லாம் துளபமணி தளிகையவன் கண்ணமுது
தரணியவ னளந்தமண் தரங்கமவன் எழிலாடை
ஊரெல்லாம் திருப்பதிகள் உறவெல்லாம் அவனன்பர்
உயிர்க்கெல்லாம் உறுதியவன் கழலிணைகள்
தேர்வல்ல சாரதியை வசவப்பநேரியானை
தேடியிங்கு சேவித்துத் தேர்ந்தவரம் கொண்டேன்.

வேதத்தில் சுருதிகளிலே ஒலியுருவாய் இருப்போன்
விரிந்தபாற் கடலின்மிசை அரவணையில் கிடப்போன்
நீதிமான்கள் வாக்கினிலே அறமாகி வருவோன்
நெடுங்கதிரில் நிலாமுகத்தில் விளக்கொளியில் மிளிர்வோன்
கீதைஓதும் பதிகளிலே ஞானமாகிப் பிறப்போன்
கெஞ்சுகின்ற அன்பர்நெஞ்சில் தஞ்சமாகி உறைவோன்
மாதவனை இதோஎன்று என்கண்கள் காட்ட
வசவப்பநேரியனை வணங்கி வரம் கொண்டேன்

மடைதிறந்த வெள்ளத்தில் வாளையினம் தாவி
மாலவனின் அவதாரம் என்றுகரை துள்ளும் !
இடைமருங்கில் முல்லைமொக்கு இதழ்விரியத் துளசி
இனியமணம் விரவிவரும் வசவப்ப நேரி
நடைபயிலும் மயிலினங்கள் குடமுழக்கெண்ணி ஆடும்
நம்பெருமாள் கோவில்மணி வேதகீதம் பாடும்
கடையநல்லூர் 'கௌஸ்துபமணி'யின் குல தெய்வம்
காணுகின்ற குடமுழுக்கு நலம்விளைக மாதோ !

❋❋
❋

உங்களுக்குத் தெரியுமா ?

வசகப்பனேரி பெரியகுளத்தின் வடக்குக்கரையில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஸ்ரீதர்மசாஸ்தாவுக்கு அன்பர்கள் தமிழில் 'அழகன்', 'அழகப்பன்' என்று நாமம் சூட்டி மகிழ்ந்தார்கள். அந்தப் பெயரை தங்கள் ஸந்ததிகளுக்கும் நாமகரணம் செய்து இரட்டிப்பு சந்தோஷம் அடைந்தார்கள்.



ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப்பெருமாள் ஆலய முகப்புத் தோற்றம்



ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயிலின் புதுப்பிக்கப்பட்ட விமானத் தோற்றம்



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
ஸ்ரீ தர்ம சாஸ்தா
ஆலயத் தோற்றம்

அப்பனாய் அம்மையாய் அரன்மால் இசைந்திட,
அருமையாய்த் தோன்றிய அற்புதச் சேயவன்,
அமரன், ஐயப்பன் அடியிணை போற்றுவோம்!
ஸ்ரீதர்ம சாஸ்தா சீரடி பரவுவோம்!



ஸ்ரீ தர்ம சாஸ்தா

ஸ்ரீ பாஞ்சராத்ர மகிமை

Sri Pancharatra Vidwan, A. V. PERIATHIRUVADI BATTACHAR,
South Mada Street, Srivaikuntam.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பன ஆன்றோர் வாக்கு. இவ்வுலகைப் படைத்துக் காத்து வருகின்ற ஸர்வேஸ்வரன் ஸர்வவியாபி; எங்குமுளன். தூணிலும் துரும்பிலுமுளன். ஆகையாலே அவனுக்கு விஷ்ணு எனப் பெயர்.

இவ்விதம் எல்லா இடத்திலுமுள்ள விஷ்ணுவை ஏன் கோவில்களில் தான் சென்று வணங்க வேண்டுமென்று வினவும் போது, பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருந்தாலும் அதைப்பெற நாம் மடுவைத்தான் வருடுகின்றோம். அதுபோல் விஷ்ணு ஸர்வ வியாபியாயிருந்தாலும் அவனருளைப்பெற ஆலயமே நமக்குப் பெரிதும் துணைபுரிகிறது.

அரணிக்கட்டையில் அக்னி உள் வியாபகமாயிருந்தாலும் அது கடைந்து வெளியான பின்னரே, தகனம் முதலான காரியங்களைச் செய்கிறது. அதுபோன்று உலகில் உள்ள எல்லா இடங்களிலும் விஷ்ணு இருந்தாலும், மந்திரங்களின் சக்தியாலும் பெருமையாலும் அவைகளை கையாளுகின்ற ஸ்தாபகனாலே பிம்பங்களில் ஆகர்ஷித்து பிரதிஷ்டை செய்வதனாலே, விஷ்ணு அங்கே வெளியாக சக்தி கொண்டு தன்னை வழிபடுகின்ற பண்டித பாமரர் வாசியற அருள் புரிகின்றான். ஆகையால் எல்லாவித முயற்சியாலும் ஆலயங்களில் விக்ரஹங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட வேணுமென்று மஹோபநிஷத் பாத்ம ஸம்ஹிதை கூறியுள்ளது. மேலும் மனம் நிராகாரமான சூன்யங்களில் இரமிப்பதில்லை. உருவங்களில் தான் இரமிக்கிறது. ஆனபடியாலே கண்ணுக்கும் மனதிற்கும் ரம்மியமானபடி லட்சணமான உருவங்களை அமைத்து ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து, அதை சதாகாலமும் சிந்திக்குமிடத்து மனம் தைரியமடைகிறது. சித்தம் ஸ்திரத்தன்மை யடைவதாலே சம்சாரக் கிலேச, துன்பங்கள் மறைகின்றன. அத்தால் அவன் மேலான நிர்வாண நிலையை அடைகிறான். ஆகையால் மனம் இரமிக்கும்படியான அர்ச்சா விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேணுமென்றது ஸ்ரீபாஞ்சராத்ரம் புருஷோத்தம ஸம்ஹிதை.

இவ்வாலயங்களைப் பற்றி பகவான் ஸ்ரீமந்நாராயணன் தானே உகந்து அருளிய ஸ்ரீ பாஞ்சராத்திரத்தில் பூகர்ஷணம், ஆலயநிர்மாணம், பிம்பலக்ஷணம், பிரதிஷ்டை, பிராயச்சித்தம் முதலியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'பகவான் ஸ்ரீமந் நாராயணனால் தன் திவ்விய பஞ்சாயுதாம்சர்களாக அவதரித்த ஔபகாயனர், சாண்டில்யர், பரத்வாஜர், கௌசிகர், மௌஞ்ச்யாயனர் என்ற முனிவர்கள் ஐவருக்கும் தோதாத்ரி மலையில் பரமகிருபையால் சம்சாரிகளான சேதனர்களை உய்ப்பிக்கவும் பூவுலகில்

நல்ல தர்மம் செழிப்புற்று நடக்கவும் உலக ரக்ஷணத்திற்காகவும் தனது ஆராதனத்திற்காகவும் வேதத்தின் ரஹஸ்யோபாயமான மோக்ஷத்தையே அளிக்கவல்ல ஏகாயன வேதத்தை திவ்விய மந்திரங்களோடும் கிரியைகளோடும் ஐந்து இரவு பகல்களாக உபதேசித்தபடியாலே '' ஸ்ரீபாஞ்சராத்ரம்'' எனவும் பகவான்தானே திருவாய் மலர்ந்தருளியபடியாலே, 'பகவச்சாஸ்த்ரம்'' எனவும் உலகப் பிரசித்தம்.

'வேதத்தில்' ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் போன்று ஸ்ரீபாஞ்சராத்ரமும் (1) மந்திர சித்தாந்தம் (2) ஆகம சித்தாந்தம், (3) தந்திர சித்தாந்தம் (4) தந்திராந்திர சித்தாந்தம் என நான்கு பிரிவுகளாக உள்ளது.

இதில் ஆகம சித்தாந்தம் கேவலம் தனிமோக்ஷத்தையும் மந்திரம், சித்திகளையும் மோக்ஷத்தையும் தந்திரம் தர்ம, அர்த்த, காம மோக்ஷங்களையும், தந்திராந்திரம், விரும்பும் எல்லாப் பலன்களையும் அளிக்கிறது என்பது ஆகமவாக்கியம்.

இதன் லக்ஷணம் அறியப்புகுமிடத்து ஏகமூர்த்தி ஆராதன ப்ராதான்யம் மந்திர சித்தாந்தம் எனவும் சதுர்மூர்த்தி ஆராதன முக்யத்வம் 'ஆகமம்' எனவும், நவமூர்த்தி ஆராதன முக்கியத்துவம் தந்திரம் எனவும், இரண்டு, மூன்று நான்கு முகங்களை உடைய மூர்த்திகளுடையவும் நரசிம்ஹம் வராஹம். ஹயக்ரீவன், போன்ற மூர்த்திகளுடையவும் ஆராதன முக்யத்வம் கூறுவது தந்திராந்திர சித்தாந்தம் எனவும் கூறியுள்ளது.

ஒவ்வொரு சித்தாந்தத்தையும் தனித் தனியாக அனுஷ்டிக்க வேண்டும் ஒன்றை மற்றொன்றோடு கலப்பது நல்லதில்லை.

கோவில்களில் முதலில் எந்த சித்தாந்தப்படி பூகர்ஷணம் முதலானவைகள் செய்யப்படுகிறதோ, அதன்படியே அந்தக் கோவில் காரியங்கள் நடைபெற வேணும்.

இவ்விதம் எந்த ஒரு சித்தாந்தம் கொண்டு, அர்ச்சித்தாலும் மோக்ஷ பலனில் வித்தியாசமில்லை.

இப் பாஞ்சராத்ரம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்களாக கூறப்பட்டுள்ளபடியால் அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு பலன்களையும் அளிக்கும்.

இப்பேர்ப்பட்ட பாஞ்சராத்ரத்தின் வக்தா நாராயணன் ஒருவனே! இந்த சாஸ்த்ராப்யாசத்திற்கு முக்கிய பலன் என்னவெனில் சரீர துர்லபமானமோக்ஷம்.

இந்த சாஸ்த்திரத்தின் பெயர் உத்தமமான விஷ்ணு ஆராதனம். இதன் சம்பந்தம் ஸத் சம்பந்தமாகும்,

இதன் லக்ஷணம் ப்ரயோஜனமும் அதை அடைய வழியுமாகும்.

வேதாந்திகள் சகல சாஸ்த்திரங்களையும் விசாரணை செய்து நாராயணனின் ஆராதனமே சிறந்ததெனக் கூறியுள்ளனர்.

இது வர்ணங்களில் பிரம்மண்யத்தையும் ஆச்ரமிகளில் யதிகளையும் தீர்த்தங்களில் கங்கையையும் தேவதைகளில் அச்யுதனையும் போன்று சாஸ்திரங்களில் பாஞ்சராத்ரம் சிரேஷ்டமானது.

இவ்விதியால் எம்பெருமானை ஆராதிப்பவன் கைவல்யபதமாம் முக்தியை அடைந்து திரும்ப இம்மடவுலகில் பிறப்பதில்லை. குறைவில்லாப் பெரும்பேறு பெறுகிறான். இதில் சந்தேகமில்லை.

अपूर्व कल्पनात् जीर्णसमुद्दारेऽधिक फलं

என்றவாறு, நூதன ஆலயம் அமைப்பதைக் காட்டிலும் ஜீர்ணமான ஆலயங்களைப் புதுப்பிப்பது அதிக பலனை அளிக்கும் என்று கூறியுள்ளபடி ஜீர்ணோத்தாரணக் கமிட்டியார்களுக்கு அப்பலனை ஸ்ரீலக்ஷ்மீ நாராயணப்பெருமாள் அருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.



மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள்
நாட்டுமக்கள் நல்வாழ்வு வாழ
அருளும் அருளுரை

1. இந்துக்கோயில்களில் பலவிதமான வழிபாடுகள் இருக்கின்றனவே? கடவுள் ஒருவரா பலரா என்று கேட்கின்றவர்களுக்குச் சரியான பதில் சொல்ல வேண்டும். எந்த நாட்டிலும் அரசாங்கம் ஒன்றாகவும் அதனுடைய அதிகாரம் பெற்ற அதிகாரிகளும் இலாக்காக்களும் பலவாகவுமே இருக்கக் காண்கிறோம். அது போல இவ்வுலகில் பிறந்திருக்கிற எல்லாரையும் ஆண்டுவருகிற கடவுள் ஒருவரே என்றாலும் அவரது அதிகாரம் பெற்ற தெய்வங்களும் இலாக்காக்களும் பலவாகவே இருக்கின்றன. அதனாலேயே அவர்களைக் கடவுள் என்று சொல்லாமல் அதி தெய்வங்கள் என்றே கூறுவர். அவர்களெல்லாம் அதிகாரம் பெற்ற தெய்வங்கள் என்பதாகும்.

2. எவ்வாறு நமது அரசாங்கம் எல்லாருக்கும் பொது உபகாரமும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் தனித்த சிறப்பு உபகாரமும் செய்து வருகின்றதோ அவ்வாறே வழிபாடு செய்யாதவர்களுக்குக் கடவுள் பொது உபகாரமும் வழிபாடு செய்து பிரார்த்திப்பவர்களுக்கு மட்டும் சிறப்பு உபகாரமும் செய்து வருகிறார்.

3. இவ்வுலகிலுள்ள சிறைச்சாலைகளில் பலதரப்பட்ட குற்றவாளிகள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் அனைவரும் அங்கு செல்லுமுன் சிறைச்சாலைக்கு வெளியே சுதந்திரமாக வாழ்ந்தவர்களே! அவர்களுடைய அறிவினால் செய்த குற்றங்களுக்குத் தண்டனையாக சிறைச்சாலைக்கு வெளியே உள்ள அரசாங்கத்தாரால் ஒரு நியாயத் தீர்ப்புப்போடப் பெற்றே சிறைச்சாலைக்குள் அனுப்பப் பெற்றிருக்கிறார்கள்.

4. அதுபோலவே இவ்வுலகில் மக்கள் ஏழை பணக்காரராக பலவித ஏற்றத்தாழ்வுகளோடு பிறந்திருப்பதற்குக் காரணம் அவர்கள் முற்பிறவிகளில் சுய அறிவோடு செய்த புண்ணியப் பாவங்களேயாகும். அவற்றிற்குத் தகுந்தபடி கருணையுள்ள கடவுளால் ஒரு நியாயத் தீர்ப்புப்போடப் பெற்றே அவ்வாறு பிறந்திருக்கிறார்கள். இப்பிறவியிலும் தங்களுடைய சுய நலத்துக்காக பிறருக்கு தீமைகளைச் செய்து பாவங்களை தேடிக்கொள்கிறார்கள். ஆனால் மனதால், வாக்கால், உடலால் செய்த பாவங்கள் அனைத்தும் கடவுளால் பதிவு செய்யப் பட்டுத் தண்டனை கொடுக்கப் பெறுபவைகளாகும். மக்களுடைய ஆட்சியில் தப்பித்துக் கொண்டாலும் கடவுளுடைய ஆட்சியில் யாரும் தப்பமுடியாது.

பக்தி செய்தால்....

1.	பருவமழை பெய்யும்	7.	சச்சரவு நீங்கும்
2.	பயிர்கள் செழிக்கும்	8.	சமாதானம் ஓங்கும்
3.	விளைபொருள்கள் பெருகும்	9.	மனக்கவலை நீங்கும்
4.	விலைவாசிகள் குறையும்	10.	மனச்சாந்தி ஓங்கும்
5.	பசிப்பிணி நீங்கும்	11.	பாவத்தைப் போக்கும்
6.	பண்பாடு ஓங்கும்	12.	பரகதியில் சேர்க்கும்

திருநீறு அணிந்தால்....

1.	உடல் நாற்றம் போகும்	7.	முகத்திற்கு அழகு தரும்
2.	நோய்க்கிருமிகள் சாகும்	8.	ஞாபக சக்தி வளரும்
3.	தீட்டுக்கள் கழியும்	9.	புத்தி கூர்மையாகும்
4.	உடம்பு சுத்தமாகும்	10.	ஞானம் உண்டாகும்
5.	வியாதிகள் ஒழியும்	11.	பாவங்களைத் தீர்க்கும்
6.	பில்லி, சூனியம் போகும்	12.	பரமனடி சேர்க்கும்

5. திருநீறு சகல பாவங்களையும் போக்குமென்று திருஞான சம்பந்த சுவாமிகள் தெளிவாகக் கூறியிருக்கிறார். கிருஸ்துவ வேதநூலில் எண்ணாகமம் பத்தொன்பதாவது அதிகாரம்—அவ்வாறே கூறுகிறது. அதனை ஆமோதித்து மத்தேயு அதிகாரம் (12) வசனம் 21 லூக்கா அதிகாரம் (10) வசனம் 13 ஆகியவற்றில் இயேசுநாதர் கூறியிருக்கிறார். இவற்றின் விவரங்களை "திருநீற்றின் பெருமையும் அதனை அணிவதால் வரும் நன்மைகளும்," "திருநீற்றுப் பதிகமும் நமச்சிவாயத் திருப்பதிகங்களும்" என்ற நூல்களில் கண்டு கொள்ளலாம்.

6. ஆனதால் இப்பிறவியில் செய்த பாவங்கள் தீர தினமும் காலையில் குளித்து திருநீறு அணிந்து திருநீற்றுப் பதிகத்தையும் நமச்சிவாயப் பதிகத்தில் இரண்டு பதிகங்களையும் பாடி கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும். மாலையில் முகம் கால் கழுவி திருநீறு அணிந்து நமச்சிவாயப் பதிகங்களில் மீதி இரண்டையும் பாடி கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும்.

7. குரு உபதேசம் பெறுதவர்கள் குரு உபதேசம் பெற்று குருநாதரிடம் கேட்ட மந்திரத்தை எவ்வளவு மனதில் உரு ஏற்ற முடியுமோ அவ்வளவு உரு ஏற்ற வேண்டும். எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும் அதனைப் போக்குவதற்கு இதுவே தலைசிறந்த சுலபமான வழியாகும். எல்லாரும் பாவம் நீங்கி நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

நல்ல மாடன் கோயிலின் நவீனத் தோற்றம்

ஸ்ரீ முத்தாரம்மன் கோயில் முகப்புத் தோற்றம்

ஸ்ரீ முத்தாரம்மனும் ஸ்ரீ பூதநாதரும்



குடமுழுக்காடிய அம்மனும் ஸ்வாமியும்
அன்பர்களுக்கு அருள்தருதல்



பூமாரி பொழிந்தனர்

— கற்பனைச் சித்திரம்

(கௌஸ்துபமணி)

வானுலகத்தில் அமராவதிக்கும் அழகாபுரிக்கும் மத்தியில் ஒரு கற்பகச் சோலையில் பாரிஜாத விருக்ஷத்தி னடியில் அமர்ந்து இருவர் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாசகர்களுக்கு தெரிந்தவர்கள்தான். ஆகையினல் அருகே சென்று பேசுவதைக் கேட்போம். நல்ல உயரமும், அதற்கேற்ற உடலும் வனப்பும் வலிமையும் கொண்டு கம்பீரமாக வீற்றிருப்பவர் ராஜபாளையம் தொழிலதிபர் ஸ்ரீ P. A. C. R. அவர்கள். நல்ல அடர்த்தியான மீசை; புன் சிரிப்புத் தவழும் முகம்; நெற்றியில் பிரகாசமான திருமண்காப்பு; பஞ்சகச்சம் வைத்து உடுத்தி முழுக்கைச் சட்டை அணிந்திருக்கிருர். அதற்கு மேல் கதர் ஜரிகை அங்கவஸ்திரம் துவளுகிறது. அவருக்குப் பக்கத்தில் அடக்கமே உருவாக அமர்ந்திருப்பவர் கிருஷ்ணபுரம் ஸ்ரீ சி. வே அவர்கள். மந்தஹாஸமான முகம்; நெற்றியில் கோபி; செவியில் சிவப்புக்கல் கடுக்கன்; அரைக்கைச் சட்டையும் வேஷ்டியும் அணிந்து யாரையோ எதிர்பார்ப்பவர்போல் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டும் உரையாடிக் கொண்டுமிருக்கிருர்.

P. A. C. R. : ஸ்வாமி! தங்கள் நண்பர் இன்னும் வரவில்லையே! கட்டாயமாக வருவார் என்று சொன்னீர்களே !

சி. வே. : ஆமாம், என்னிடம் சொன்னதை தங்களிடம் தெரிவித்தேன். அதுதான் நாலாபக்கமும் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

P.A.C.R. : நண்பரே! பயோனியர் குமாரசுவாமி அவர்கள் எப்போதுமே ரொம்ப Punctual. சரியான சமயத்திற்கு வந்து விடுவார். இன்று ஏதாவது அவசர வேலையிருக்கலாம், சரியான காரணம் இருக்கும் தாமதிப்பதற்கு.

சி.வே. : அப்படித்தான். சொன்ன சொல் தவருத உத்தமர். அவர் ஒருநாள் பூலோகத்தில் இருக்கும்போது என்னிடம் சொன்னர்: ''சாமி! தங்களுக்கு முன்னலேயே நான் ஸொர்க்கத்துக்குச் சென்று தங்களுக்கு இடம் பிடித்து வைப்பேன்'' என்று. அதன்படியே எனக்கு முன்னமேயே உயிர் நீத்தார். இங்கு வந்து இடமும் தயார் செய்து விட்டார்.

P.A.C.R. : அப்படியா தாங்கள் சொல்லாமலேயே எனக்கு முன்னல் இங்கு வந்து எனக்காக ஓர் இடம் ரிசர்வ் செய்து விட்டீர்களே! சொல்லிச் செய்வதைவிடச் சொல்லாமல் செய்வது எவ்வளவோமேல் அல்லவா ?

சி.வே. : அவரும் சொல்லாமல் (நான் கேட்டுக் கொள்ளாமல்) தான் செய்தார். விவரத்தை முன் கூட்டி அறிவித்தார். அவ்வளவு தான்.

P.A.C.R. : இதுபோல் பாஷ்யக்காரர் ஸ்ரீ இராமனுஜருடைய வரலாற்றிலும் ஒரு நிகழ்ச்சியுண்டு.

சி.வே. : அப்படியா!

P,A.C.R. : உண்மையான நட்பு பல பிறப்புகளுக்கு தொடர்ந்து போகும் என்று சொல்வார்கள். நட்பு முற்றித்தானே பக்தியாக மாறுகிறது......
அதோ பாருங்கள். உங்கள் நண்பர் வருகிறார்.

(அழகாபுரி திசையிலிருந்து பயோனியர் குமாரசுவாமி இவர்களை நோக்கி ஆவலுடன் ஓடி வருகிறார். சி. வே. எழுந்துபோய் அவரைக் கை பிடித்து அழைத்து வந்து அருகில் அமர்த்துகிறார்.)

பயோனியர் குமார சுவாமி: தோழர்களே! நான் அவசரமாக இங்கே வருவதற்காகப் புறப்படும் சமயத்தில் மணிக்ரீவன் வந்து அழைத்தார். அவருடைய தந்தையான குபேரனுடைய புஷ்பகவிமானம் ரிப்பேர் ஆகிவிட்டதென்றும், பழுது பார்த்து உடனே கைலாசத்துக்கு பிரதோஷ தர்சனத்துக்குப் போக வேண்டும் என்று என்னை அழைத்துப் போனார். அங்கே போய் வேலையை நிறைவேற்றிவிட்டு ஓடோடியும் வருகிறேன். தாமதத்திற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

சி.வே. : பரவாயில்லை. சொர்க்கத்தில் எனக்குப் பொழுதே போகவில்லை. ஒரு வேலையுமில்லாமல் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. உமக்காவது வேலை இருக்கிறதே!

P.A.C.R. : எனக்கு நேரம் போவதே தெரியவில்லை. இது கர்ம பூமியல்ல. போகபூமி. பூவுலகத்தில் செய்த வினைகளுடைய பயனை அனுபவிக்கத்தான் இங்கே வந்திருக்கிறோம். இகத்தில் ஸத்கர்மங்கள், புண்ணிய காரியங்கள் செய்ததால் சொர்க்கத்தில் வாஸம். இங்கேயும் வேலையை எதிர்பார்ப்பது சரியல்ல.

ப. கு. : எனக்கு இந்த ரிப்பேர் சரி பார்க்கும் வேலை இருக்கவே இருக்கிறது. அதற்கே நேரம் சரியாக இருக்கிறது.

சி. வே. : தாங்கள் சொல்வதும் சரிதான். தேவ சபையில் நடனம், சங்கீதக் கச்சேரி; கந்தர்வலோகத்தில் இசைப்பயிற்சி, நாட்டியப்பயிற்சி, இன்னும் நாடகங்கள், எல்லாம் நடக்கின்றன. எனக்கு இவைகளிலொன்றும் மனம் செல்லவில்லை நண்பர் ராஜா கொடுத்து வைத்தவர். ஒரு நிகழ்ச்சி தவறாமல் பங்கு பெறுகின்றார்.

P.A.C.R. : ஆமாம் எனக்கு அவைகள் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. சுகமாக, உல்லாசமாக வாழ்வதற்குத்தானே சொர்க்கத்துக்கு வந்திருக்கிறோம். ஆனால் இந்த வாழ்வில் எனக்கும் ஒரு குறை தென்படுகிறது.

ப.கு. : அதுவென்ன, நண்பரே !

P.A.C.R. : ஒன்றுமில்லை. ரேடியோஇல்லை, டெலிவிஷன் இல்லை, சுவிட்சைப் போட்டவுடன் நியூஸ் கேட்பதற்கு! நமக்குச் செய்திகள் சொல்லுவதற்கு நாரதரைத்தான் நம்ப வேண்டியதாகயிருக்கிறது.

ப.கு. : சரிதான். நாம் பூலோகத்தைவிட்டு வந்து பல வருஷங்களாகிவிட்டாலும் நமது சந்ததிகளைப் பற்றி அறிய ஆவல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கு நாம் நாரதரைத்தான் எதிர்பார்க்க வேண்டியதாகயிருக்கிறது.

சி.வே. : நாரதரும் தினசரி மாலை வேளையில் வந்து பூலோகச் செய்திகளை நமக்காக கூறிப்போகிறார். அவருக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

P.A.C.R. : மனிதர்களுக்கு ஒரு வருஷம் என்பது தேவர்களுக்கு ஒரு தினமாகும். நாரதர் இன்று வந்து அறிவிக்கும் செய்திகள் சென்ற வருஷச் செய்தியாகும். உடனுக்குடன் வானொலிப்பெட்டியில் தெரிவது போல் தெரிய முடியாது. அதுதான் எனக்கு வருத்தம்.

ப. கு. : நாம் மூவரும் சேர்ந்து வானொலிப்பெட்டி செய்யும் தொழிற்சாலை ஆரம்பித்தால் நல்லதல்லவா? உங்கள் அபிப்ராயம் என்ன?

P.A.C.R. : நல்லது தான். முதலில் தேவேந்திரன் அனுமதி வாங்க வேண்டும். பிறகு பொருளாதாரம். இது இரண்டும் கிடைத்தாலும் வேலையாட்கள் கிடைப்பது அரிது. தேவலோகத்தில் ஒருவரும் வேலை செய்ய மாட்டார்களே! உடுத்து, உண்டு, குடித்து, ரமித்து, கேளிக்கையில்தான் மூழ்கியிருக்க விரும்புவார்கள்.

சி. வே. : நண்பர் கவலைப்பட வேண்டாம். தொழிற்சாலை ஆரம்பம் ஆகிவிட்டது என்றே நம்புங்கள். தேவேந்திரன் சம்மதம் நான் வாங்கி விடுகிறேன். பிருஹஸ்பதி என்னிடம் அபிமானமாக இருக்கிறார். என்னுடைய எளிய வாழ்க்கை அவரை ரொம்பக் கவர்ந்து விட்டதாம். நான் கேட்டால் தேவேந்திரனிடம் சிபார்சு செய்து அனுமதி வாங்கித்தருவார். ஏதாவது கொஞ்சம் இழுபறி இருந்தாலும் சமாளித்து விடலாம். தேவேந்திரனை நிர் வாகக் குழுவுக்குத் தலைவராகப் போட்டுவிடலாம். அப்போது நிச்சயமாகச் சம்மதம் தந்துவிடுவார்.

ப. கு. பொருளாதாரம் பற்றிய கவலை வேண்டாம். அதற்கு நான் ஆயிற்று. இன்றுகூட குபேரன் என்னிடம் ''ஒரு தொழிற்சாலை தொடங்குங்கள்; வேண்டிய பணம் வட்டியில்லாமல் தருகிறேன்'' என்று சொன்னார்.

P. A. C. R. அவருக்கு என்ன தொழிற்சாலை தொடங்க வேண்டுமாம்? வானொலிப் பெட்டியா அல்லது வேறு ஏதாவது இரும்புப் பெட்டியா?

ப. கு. அவருக்கு சிறு விமானம் தேவை! ஒருவர் அல்லது இருவர் போகக்கூடிய சிறிய விமானம் உற்பத்தி செய்ய வேண்டுமாம். ஹெலி காப்டர் போல்.

சி. வே. நண்பர்களே! பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது. இதுவே தீர்மானம். நாம் ஒரு பெரிய தொழிற்சாலை தொடங்குகிறோம். அதில் சிறிய விமானம், டெலிவிஷன் பெட்டி, வானொலிப்பெட்டி முதலியவைகள் உற்பத்தி செய்யப்படும். நிர்வாகக் குழுத்தலைவர் தேவேந்திரன் அவர்கள். உபதலைவர் P.A.C.R. அவர்கள். பொருளாதார இயக்குநர் குபேரன் அவர்கள். நிர்வாக இயக்குநர் ப. கு, அவர்கள்

P. A C. R. நண்பரே! தங்களுக்கு ஒரு பதவியும் வைத்துக்கொள்ளவில்லையே!

ப. கு. அவர்தான் கௌரவ ஆலோசகராக விளங்குவார்.

P.A.C.R: எல்லோருமே கௌரவமாகத்தானே வேலைபார்க்கப் போகிறோம். சம்பளமா வாங்கப்போகிறோம்? சம்பளம் வாங்கினாலும் அதை என்ன செய்ய முடியும்? செலவு செய்யவும் மார்க்கமில்லையே!

ப. கு: சேர்த்து வைக்கவும் வழியில்லையே!

சி. வே: பின்வாரிசுகளுக்குக் கொடுக்கவும் முடியாதே! ஆகையால் சம்பளம் தேவையில்லை.

P.A.C.R: எல்லாம் நன்றாக அமைந்து விட்டது. ஆனால் வேலையாட்களின் பிரச்னைக்கு தீர்வு காணவில்லை.

சி, வே; ஆமாம். அதற்கு என்ன செய்வது?

(மூவரும் ஆலோசிக்கின்றனர். கொஞ்ச நேரங்கழிந்தது)

சி. வே; நண்பர்களே! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தேவர்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஆஜானஜான தேவர்கள் என்றும் கர்ம தேவர்கள் என்றும் பிரிவுகள் இருக்கின்றனர். அவர்களில் ஆஜானஜான தேவர்கள்தான் வேலை செய்ய மாட்டார்கள். சோம்பேறிகளாய் இருப்பார்கள். கர்ம தேவர்கள் வேலை செய்வார்கள். அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம்,

P.A.C.R: சரியான யோசனை. அப்படியே செய்வோம். கர்மதேவர்கள் நம்மைப்போல் தான் வேலை செய்ய விருப்பம் கொள்வார்கள். சபாஷ், தோழரே!

ப. கு: தோழர்களே, எனக்கு இந்த பிரிவுகள் விளங்கவில்லையே! பூலோகத்தில்தான் ஜாதி, இனம், மொழி வேற்றுமைகள். அவைகள் வானுலகத்திலும் உண்டா?

சி.வே: சொர்க்கத்தில் ஜாதி, இனம், மொழி என்ற வித்தியாசங்கள் கிடையாது. பசி, தாகம், மூப்பு, பிணி, சாக்காடு இவைகளும் இல்லை. நண்பருக்கு சந்தேகம் வேண்டாம். ஆஜானஜான தேவர்கள் என்றால் சிருஷ்டியின் தொடக்கத்தில் பிறப்பிலேயே தேவர்களாக ஜனித்தவர்கள். கர்ம தேவர்கள் என்றால் புண்ணியம் செய்து அதன் பலனை அனுபவிக்க தேவலோகத்துக்கு வந்து வசிப்பவர்கள். இதுதான் விபரம். வேறு போகத்திலோ சுகத்திலோ வேற்றுமை ஒன்றும் இல்லை.

ப. கு: நன்றாகப்புரிந்து கொண்டேன். கர்ம தேவர்கள் கட்டாயம் தொழில் செய்ய உடன்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் உற்பத்தியில் பங்கும் கொடுத்து விடலாம்.

P.A.C.R: அப்படியே செய்து விடுவோம். முறையாக விண்ணப்பம் எழுதிக் கையெழுத்துச்செய்து அக்கினி தேவன் மூலமாக தேவேந்திரனிடம் சமர்ப்பிக்கிறேன்.
